வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk மலர் : 03 08.03.2022 செவ்வாய்க்கிழமை இதழ் : 93 பக்கங்கள் : 16

## அனைத்து வீதி விளக்குகளையும் மாத இறுதி வரை அணையுங்கள்

மக்களிடம் கோருகின்றார் பஸில்



கொழும்பு, மார்ச் 08

நேற்று முதல் மார்ச் 31 ஆம் திகதி வரை தமது பிரதேசத்தில் உள்ள அனைத்து வீதி விளக்கு களையும் அணைக்குமா றும் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ கோரியுள்ளார். 15

## ஈஸ்டர் தாக்குதலில் பாதிப்புற்றோருக்கு நீதி கிடைக்க ஐ.நா. தலையிடவேண்டும்

ஜெனிவாவில் கோரினார் மல்கம் ஆண்டகை

ஜெனிவா, மார்ச் 08


ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியை வெளிக் கொண்டுவரவும் பாதிக் கப்பட்டோருக்கு நீதியை வழங்கவும் ஐக்கிய நாடு கள் மனித உரிமைகள் சபை தலையிடவேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரியுள் ளார்.

ஐ.நா. மனித உரிமை கள்பேரவையின் 49 ஆவது அமர்வில் பேசிய அவர், தற்கொலை குண் டுத் தாக்குதலில் 82 குழந்தைகள் 15



# சமஷ்டி யாப்பை உருவாக்குவதற்கு தமிழ் கட்சிகள் ஒன்றுசேரவேண்டும்!

## விக்னேஸ்வரன் எம். பி. அழைப்பு



- இன்று தமிழினம் மிகஆபத்தான கட்டத்தில்!
- முன்னணியும் நாமும் கோருவது சமஷ்டியே
- எங்களை நாமே விமர்சிப்பது அழிவையே தரும்
- பூகோள அரசியலை சாத்தியமாக்க ஒற்றுமை தேவை!

யாழ்ப்பாணம், மார்ச் 08

தமிழரின் விடியலுக்காக திறந்த மனதுடன் கலந்துறவாடி ஓர் ஒற்றுமை ஒன்றியத்தை உருவாக்குவது அவசியம். அதன் பின்னர் அரசாங்கத்துடனும் சர்வதேசத்துடனும் பேசுவோம். நிலத்திலும், புலத்திலும், தமிழகத்திலும் உள்ள தமிழுறவுகள் இவ்வாறான ஒற்றுமைக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். ஒன்று சேர்ந்து ஒரு சமஷ்டி அரசியல் யாப்பை இலங்கையில் உருவாக்கப் பாடுபடுவோம் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன் அழைப்பு விடுத் துள்ளார். 15

## கல்வி தகுதியை வெளிப்படுத்த 20 வீதமான எம்.பிக்கள் மறுப்பு!

கொழும்பு, மார்ச் 08

20 வீதமான பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கல்வித் தகைமையை தெரிவிக்க மறுப்புத் தெரிவித் துள்ளனர் என்று பாராளுமன்ற அலுவலகம் தெரி வித்துள்ளது.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் அடிப்படை தரவுகளை சேகரிக் கவும், அவர்களின் கல்வித் தகைமைகள் உள்ளடங்க லாக அவர்களின் தனிப்பட்ட கோப்புகளை பரா மரிக்கவும் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரின் கல்வித் தகைமை, தொடர்பு இலக்கம் என்பவற்றை பாராளுமன்ற அலுவலகம் கோரியது.

இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டு ஒரு வருடத்துக்கு அதிக காலம் கடந்துள்ளபோதி லும் 80 வீதமான பாராளுமன்ற 15

## இலட்சியம் எட்டும்வரை எங்கள் பயணம் ஓயாது!



கிளிநொச்சி, மார்ச் 08

“எந்த இலட்சியத்துக் காக எமது இளைஞர் கள் கடந்தகாலத்தில் தம் உயிர்களைத் தியாகம் செய்தார்களோ, அந்த இலட்சியத்தை எட்டும் வரையில் எமது பயணம் ஓயாது.”

- இவ்வாறு இலங் கைத் தமிழ் அரசுக் கட்சி யின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித் துள்ளார்.

கிளிநொச்சி - பசு மைப் பூங்காவில், தமிழ் அரசுக் கட்சி யின் கிளிநொச்சி 15

## யாழில் தங்கத்தின் விலை உச்சம் தொட்டது!

யாழ்ப்பாணம், மார்ச் 07

யாழ்ப்பாணத்தில் தங் கத்தின் விலை ஆயிரத்து 500 ரூபாயால் உயர்வ டைந்து ஒரு இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் என வரலாற்றில் முதல் தட வையாக புதிய உச்சத் தைத் தொட்டுள்ளது.

ரஷ்யா - உக்ரைன் போரால் சர்வ தேச பங் குச் சந்தை மீதான முதலீடு குறைவடைந்து தங்கத்தின் மீதான முத லீடு அதிகரித்துள்ளது. இதனால் உலக சந்தை யில் தங்கத்தின் விலை பெருமளவும் அதிகரிக் கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கட் கிழமை 22 கரட் 15

## சுதந்திரக் கட்சி இன்று ஜனாதிபதியுடன் சந்திப்பு!

கொழும்பு, மார்ச் 08

அரசாங்கத்தின் கூட்டி லிருந்து சந்தர்ப்பம் பார்த்து வெளியேறுவ தற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் தொகுதி அமைப்பாளர் களை அந்தக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன சந்தித்துப் பேசினார். இதன்போது, அவர்கள் அரசாங்கத்திலி ருந்து வெளியேற வேண் டும் என்று வலியுறுத்தி னர்.

அவர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த மைத்திரிபால சிறிசேன, “அரசாங்கத்தில் இருந்து 15

## கொரோனாவுக்கு எண்மர் மரணம்!

கொழும்பு, மார்ச் 08

கொரோனா தொற் றால் நாட்டில் நேற்று முன்தினம் மட்டும் 8 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித் துள்ளது.

30 வயதுக்குட்பட்ட ஓர் ஆணும், 30 - 59 வய துக்கு இடைப்பட் டவர் களில் ஓர் 15

## ஒட்டுமொத்தமாக சீரழிகின்றது இலங்கை மனித உரிமைநிலை!

### இராணுவ மயமாக்கல், பயங்கரவாத சட்ட பாதிப்பு குறித்து ஜெனிவாவில் முறையிட்டார் ஹரீன் எம்.பி.

ஜெனிவா, மார்ச் 08

பயங்கரவாதச் சட் டம், இராணுவமயமாக் கல் மற்றும் இலங்கையில் ஒட்டு மொத்தமாக சீர ழிந்து வரும் மனித உரிமை நிலைமை தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கவனத் துக்கு கொண்டு சென்றுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்க ளுக்கு நீதி கிடைக்காமை, தாக்குதலின் பின்ன ணியில் இருப்பவரை பாதுகாக்கும் நடவடிக்கைகள் 15

## இப்படியும் நடக்கிறது...!

கொழும்பு அரசியல் இப்போது சூடு பிடித்திருக்கிறது.

இலங்கை மீண்டெழ வேண்டுமானால், தற்போது சுறுசுறுப்படைந்திருக்கும் சுற்றுலாத்துறை பழைய வீச்சுடன் தொடரவேண்டும். தொடர்வதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கிய வேளையில் மீண்டும் அதற்கு 'இடி' விழுந்ததுபோல, ரஷ்ய - உக்ரைன் மோதல் நெருக்கடியைக் கொடுக்குமோ தெரியவில்லை.

அந்த யுத்தம் எப்போது முடியும் என்பதையும் ஊகிக்க முடியவில்லை. இந்த இரண்டு நாடுகளிலிருந்தும் கணிச மான சுற்றுலாப்பயணிகள் இலங்கை வந்துசெல்கின்றனர்.

அதைவிட, இலங்கையின் பிரதான ஏற்றுமதி வருமானம் ஆடைத்தொழில் மூலம் கிடைக்கின்றது. ஆடைத் தொழில் வருமானத்திற்கு ஐரோப்பிய ஒன்றியத் தின் 'ஜி. எஸ். பி.' சலுகை முக்கிய பங்கு அளிக்கின்றது.

அதனைத் தொடர பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்ற நிபந்தனையை வித்திருக்கின்றது ஐரோப்பிய ஒன்றியம்.

இதுவே இன்று பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றுவதற்காக சட்டமூலம் தயாரிக்கப்பட்டு பாரா ளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்படக் காரணமானது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் விருப்பத்திற்கு அமைய அதில் மேலும் சில மாற்றங்களை அரசாங்கம் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாலேயே அந்தச் சட்டத்தை நீக்கக்கோரி போராட்டங்கள் நடக்கின்றன.

அரசு இன்றிருக்கும் நெருக்கடிநிலையில் அதனை புதிய திருத்தங்களுடன் செய்யும் என்பது தெரிந்ததுதான். அது செய்யப்பட்டதும் அதற்கு உரிமைகோர நம்மால் தான் முடியும்.

ஆளும் பொதுஜன முன்னணியின் பங்காளிக்கட்சிகள் இப்போது ஒன்றுபட்டு நிற்கின்றன. இவர்களுக்கிடையே என்னதான் பிரச்னை என்பது பகிரங்கமான இரகசியம்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் களமிறங்க பஸில் விரும்புகின்றார் என்பதும், அதனை இவர்கள் ரசிக்க வில்லை என்பதும்கூட புரிந்துகொள்ளக்கூடியதே. அத னால்தான் இவர்கள் ஜனாதிபதியையோ அல்லது பிரத மரையோ இலக்கு வைத்து தாக்குதல் தொடக்கவில்லை.

அமைச்சரவையிலிருந்து இரண்டு அமைச்சர்கள் வெளி யேற்றப்பட்டதைத் தொடர்ந்து, குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முயல்வதுபோல, விமல் வீரவன்ஸவை பிரதம ராக முன்நிறுத்தி ஓர் ஆட்சியை அமைக்க சிலர் காய்நகர்த் தல்களை தொடங்கியிருப்பதாக கொழும்பிலிருந்து ஊடக நண்பர் ஒருவர் தகவல் தந்தார்.

இது சாத்தியமாகக் கூடியதல்ல என்பது இந்த முயற்சி யில் ஈடுபடுபவர்களுக்கும் நன்கு தெரியும். ஆனால், அவர்களின் செயல்பாடெல்லாம் எல்லாம், எங்கே இவர் கள் மீண்டும் மஹிந்தவுடன் சங்கமமாகி விடுவார்களோ என்ற பயம்தான்.

ஆனால், இவர்களின் வெளியேற்றம் ஆளும் தரப்பிற்கு இன்னுமொரு வழியையும் திறந்து விட்டிருக்கின்றது.

சிங்கள கடும்கோட்பாளர்களான விமலும், கம்மன் பிலவும் வெளியேறிவிட்டதால், சிறுபான்மைக் கட்சி களை தம்மோடு இணைத்துக்கொள்வது இனி பொதுஜன முன்னணிக்கு சிரமமாக இருக்காது.

சிறுபான்மைக் கட்சிகளுடன், முக்கியமாக முஸ்லிம் தரப்பினருடன் பஸிலுக்கு இருக்கும் நெருக்கம் இதற்கும் உதவலாம்.

இந்த பங்காளிக் கட்சிகளின் 'பலம்' என்பது என்ன என்பதும் அனைவருக்கும் தெரிந்ததுதான். விமல் வேண் டுமானால் தனித்துநின்று வெற்றிபெறக்கூடிய 'வல்லமை' உள்ளவர்தான். அதுவும் அவர் மாத்திரம். ஆனால், கம் மன்பிலவோ அல்லது இடதுசாரிக் கட்சிகளோ தனித்தோ அல்லது அவர்கள் மாத்திரமே கூட்டாகவோ தேர்தலை சந்திப்பது, பிரதான கட்சிகளுக்கு எந்த வகையி லும் சவாலாக இருக்கப்போவதில்லை.

சிலவேளைகளில் அவர்கள் சுதந்திரக் கட்சியுடன் கூட் டுச் சேர்ந்தால், சுதந்திரக் கட்சிக்கு இருக்கும் கொஞ்ச வாக்குகளில் அவர்களும் பங்குபோட்டுக்கொள்வார்களே தவிர, இவர்களால் சுதந்திரக் கட்சிக் கூட்டணிக்கு வாக் குகள் அதிகரிக்கப்போவதில்லை. அது, மைத்திரி போன்ற 'சூட்சுமம்' தெரிந்த அரசியல்வாதிகளுக்கு தெரியாத துமல்ல.

எது எப்படியோ, தெற்கு அரசியல் இனிக் கொஞ்ச நாளைக்கு ஊடகங்களுக்கு தீனி போடப்போகின்றது!

- ஊர்க்குருவி

# அடுத்த மாதம் நாடு வழமைக்கு திரும்பும்!

கொழும்பு, மார்ச், 08

தற்போதைய நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி வீடுகளில் சிகிச்சை பெறுபவர் களில் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒன்றரை இலட் சமாக அதிகரித்துள்ளன என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அடுத்த மாத இறுதிக்குள் கொரோனா நிலைமையிலி ருந்து நாடு வழமைக்கு திரும் பும் என்றும் அதற்கான நடவ டிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கலகெதர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரி வித்த அவர், வீடுகளில் சிகிச்சை நடைமுறையை கொண்டுவரா மல் இருந்திருந்தால் நிலைமை பாரதூரமாக மாறியிருக்கும்.

இதுவரை வீடுகளில் சிகிச்சை பெற்ற கொரோனா தொற்றாளர்களில் ஒருவர் மட்டுமே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அத்துடன் வீடுகளில் சிகிச்சை பெற்றவர்களில் 1,460 பேர் மட்டுமே மேலதிக சிகிச் சைக்காக வைத்தியசாலை களுக்கு மாற்றப்பட்டனர்.

வீடுகளில் சிகிச்சை பெறு பவர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காக குறுஞ்செய்தி அனுப்பும்முறை நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

நோயாளர்கள் தொடர்பில், தகவல் வழங்கப்பட்டு 30 விநா



டிகளில் சுகாதார பிரிவின் அதி காரி நோயாளரின் வீட்டுக்கு சென்று மேலதிக நடவடிக்கை களை எடுக்கும் வகையில் இவ் விடயம் நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளது. இந்த முறைை மக்கு உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டுக்களை தெரிவித் துள்ளது.

கொரோனா வைரஸ் தொற் றுப் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களால், கொரோனா தொற்றுக்கு உள் ளாகி மரணிப்பவரின் இறுதிச் சடங்கில் உறவினர்கள் பங்கேற முடியாத நிலைமை தொடர்ந்து வருகின்றது. எதிர்வரும் காலங் களில் இந்த நிலைமை ஓரளவு சரி செய்யப்படும் என்று எதிர் பார்க்கின்றேன் - என்றார். (கே)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 08

மூளாய் ஸ்ரீமுத்துக்குமார சுவாமி ஆலய உத்தர பக்ஷ வருடாந்த பெருந்திருவிழா நாளை புதன்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம் பமாகி தொடர்ந்து இடம் பெறவுள் ளது. (ஐ)

## மன்னாரில் நூலகத்துக்கு புத்தகங்கள் அன்பளிப்பு

மன்னார், மார்ச். 08

மன்னார் ஜேசேப்வாஸ் நகர நூலகம் - சிறுகுள் படிப்பகம் செயல் திட்டம் ஊடாக நேற்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப் பட்டது.

பாடசாலை மாணவர்களின் வாசிப்பு திறனை விருத்தி செய் யும் வகையில் சிறுகுள் அமை யம் ஊடாக சேகரிக்கப்பட்ட புத்தகங்கள் முதல் கட்டமாக வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதேச மாண வர்கள், வன்னி தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் செல்வம் அடைக்கலா தன், ஜோசப் வாஸ் நகர பங்கு பங்குத்தந்தை ராஜநாயகம் அடிகளார் மற்றும் அமையத் தின் மன்னார், யாழ். பிராந்திய செயல்பாட்டாளர்களும் கலந்துகொண்டனர். (ஐ)

## பூப்புனித நீராட்டு விழாவில் 14 பவுண் நகைகள் திருட்டு!

யாழ்ப்பாணம், மார்ச் 08

பூப்புனித நீராட்டுவிழா நடைபெற்ற வீடு ஒன்றில் 14 பவுண் நகைகள் திருடப்பட் டன. அத்துடன், 2,500 வெளி நாட்டு பவுண்ஸ் நாணயங்க ளும் திருடப்பட்டுள்ளன என்று அச்சுவேலி பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

புத்தூர் - நவக்கிரியில் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

வீட்டின் பின்பக்க யன்னல் கம்பிகளை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள், பிரத்தி யேகமான இடத்தில் வைக்கப் பட்டு இருந்த 12 பவுண் தாலி உட்பட 2 பவுண் சங்கிலியை யும் திருடிச் சென்றுள்ளனர்.

திருடப்பட்ட நகையின் பெறுமதி 15 இலட்சம் ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேல திக விசாரணைகளை அச்சுவேலி குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-3)

## முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மேலதிக அரச அதிபர் நியமனம்!

முல்லைத்தீவு, மார்ச் 08

மன்னார் மாவட்ட செயல கத்தின் மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிய எஸ். குணபாலன் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக (காணி) தனது கட மைகளை கடந்த வியாழக் கிழமை முதல் மாவட்ட அர சாங்க அதிபர் க.விமலநாதன் பொறுப்பேற்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தை பூர்வீகமாகக் கொண்ட இவர் 1996ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் எழுதுநராக அரச சேவைக்குள் கால்பதித்தார். தொடர்ந்து 2018ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி தொடக்கம் கடந்த புதன் கிழமை(03) வரை மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக (நிர்வாகம்) கடமை



யாற்றியிருந்தார்.

இந்த நிலையிலேயே அவர் முல்லைத்தீவு மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபராக (காணி) நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் ஸ்ரீநியமனத்தின் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்டகாலமாக நிலவிவந்த வெற் றிடம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மழைவீழ்ச்சி கிடைக்கும்வரை மின்வெட்டு அமுல் தொடரும்!

கொழும்பு, மார்ச் 08

மீண்டும் மழை வீழ்ச்சி ஏற் படும் வரை மக்களுக்கான மின் விநியோகம் மட்டுப்படுத்தப் படலாம் என்று பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழு தெரி வித்துள்ளது.

கொழும்பில் நேற்று ஊடகங் களுக்கு கருத்து தெரிவித்த அதன் தலைவர் ஜானக ரத் நாயக்க இதனைத் தெரிவித்தார்.

இன்று செவ்வாய்க்கிழமை முதல் மின்வெட்டு காலத்தை 2 மணிநேரமாகக் குறைக்க முடி யும் என்றும் ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, மின்வெட்டு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் மேற்கொள் ளப்படாமல் இலங்கை மின்சார சபையினால் மட்டுமே மேற் கொள்ளப்படுவதாக ஜானக ரத்நாயக்க பொதுமக்களுக்கு தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
08.03.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மாசி 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

## அரசியல் தயார்படுத்தலை நோக்கி?

வெற்றிநடை போடுமென்று எதிர்பார்க்கப்பட்ட ராஜபக்ஷகளின் மறு பிரவேச அரசாங்கம், தொடர்ந்தும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றது. அரசாங்கத்தின் செல்வாக்கு நாளுக்குநாள் சரிந்து செல்கின்றது. இந்த செல்வாக்கு வீழ்ச்சியின் பிரதிபலிப்புத்தான், பங்காளிக் கட்சிகளுக்கும் ஆளும் ராஜபக்ஷக்களுக்கும் இடையிலான முரண்பாடாகவும் உருமாறியிருக்கின்றது. ஓர் அரசாங்கம் திடகாத்திரமாக இருக்கின்றபோது, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிகள் இலகுவில் முரண்பட விரும்பமாட்டார்கள். ஏனெனில், அவ்வாறு முரண்பட்டால் அது அவர்களையே அதிகம் பாதிக்கும். ஆனால், தற்போது அப்படியான நிலைமையில்லை. அரசாங்கத்திலிருந்து வெளியேறினால்கூட, மக்கள் மத்தியில் அது ஒரு பெரிய விடயமாக இருக்கப்போவதில்லை. இதன் காரணமாகத்தான் அரசாங்கத்தின் உள்முரண்பாடுகள் வேகமாக பொதுவெளிக்கு வந்திருக்கின்றன. இது அவர்களின் பிரச்னை.

மறுபுறம் தமிழர் அரசியலில் நிலைமை என்ன? தமிழ்த் தேசிய அரசியல் மிகவும் பலவீனமாக இருக்கின்றது. இலங்கை தமிழ் அரசு கட்சி ஒருபுறமாகவும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோவும் டி. பி. எல். எவ். (புளொட்) பிறிதொருபுறமாகவும் இருக்கின்றன. விக்னேஸ்வரன் தலைமையில் தனித்து சென்றவர்கள் பிறிதோர் அணியாக இருந்தபோதும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளோடு ஒன்றிணைந்து செயற்படுகின்றனர். மறுபுறம், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸோ, எவருடனும் சேருவதில்லை என்னும் உடும்புப்பிடி அரசியலில் குதுகலமாக இருக்கின்றது. யாழ். மேயர் மணிவண்ணன் தலைமையிலான ஒரு சிறிய அணியினர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு உரிமை கோருகின்றனர். முன்னணி விடயத்திலும் எதிர்காலத்தில் தெருச் சண்டைகளைக் காண நேரிடலாம்.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளைப் பொறுத்தவரையில் - இப்போது தமிழ் அரசு கட்சியுடன் முரண்படுவதாக கூறிக்கொண்டாலும்கூட, தேர்தலென்று வருகின்றபோது - என்ன செய்வார்கள் என்பது ஒரு கேள்வி. தேர்தலில் கூட்டமைப்பாக நிற்பார்களாக இருப்பின் - தமிழ் அரசு கட்சியின் தலைமையில்தான் நிற்க வேண்டும். ஏனெனில், கூட்டமைப்பில் வேறு தெரிவுகள் இல்லை. செல்வம் அடைக்கலநாதனும் சித்தார்த்தனும் கூட்டமைப்பாக நிற்கும்போது, விக்னேஸ்வரன் தலைமையிலானவர்கள் என்ன செய்வார்கள்? தனியாக தேர்தலை எதிர்கொள்வதைத் தவிர வேறு தெரிவுகள் இல்லை. சுரேஷ் பிறேமச்சந்திரன் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிதான், இதில் அதிகம் கையறு நிலையில் சிக்கப்போகும் கட்சியாக இருக்கப் போகின்றது.

இந்த அடிப்படையில் சிந்தித்தால் மீளவும் அனைவரும் தனித்தனியாக தேர்தலை எதிர்கொண்டு, ஒருவரையொருவர் விமர்சித்துக் கொள்ளும் அரசியல்தான் தமிழ்த் தேசிய அரசியலென்னும் பெயரில் மிஞ்சப் போகின்றது? கேள்வி - இப்படியான ஓர் அரசியலால் தமிழ் மக்களுக்கு கிடைக்கப் போவது என்ன? தமிழ்த் தேசிய அரசியல் சூழலிலுள்ள மிகவும் மோசமான பலவீனம் என்னவென்றால் - இங்கு அனைத்துமே பலவீனமாக இருக்கின்றது. அரசியல் தரப்புக்கள் தங்களுக்குள் சிதறிக்கிடக்கும்போது, சிவில் சமூக தரப்புக்கள் தங்களுக்குள் பலமாகி - நிலைமைகளை சரி செய்ய முயற்சிக்க வேண்டும். ஆனால், சிவில் சமூகமும் இங்கு மிக மோசமான நிலையில் இருக்கின்றது.

ஆனால், தமிழ்த் தேசிய தரப்புக்கள் தங்களுக்குள் ஒன்றுபட்டு, தங்களை ஒரு வலுவான தேர்தல் கூட்டாக்கிக் கொள்ளாவிட்டால், நிலைமை மோசமடைவதை தடுக்க முடியாது. தமிழினம் அரசியல்ரீதியில், மிக மோசமான நிலைக்கு தள்ளப்படும். ஆகக் குறைந்தது 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கூட பேச முடியாதளவுக்கான நிலைமை ஏற்படலாம்.

# உக்ரைன் அனுபவத்தின் பின்னரும் சர்வதேசத்தை நம்பும் நிலை!

**அலசுவது இராஜதந்திரி**

இலங்கை அரசின் பொறுப்புக்கூறல் விடயத்தை உறுதிப்படுத்தி அதற்கு செயல் வடிவம் கொடுக்க நிர்ப்பந்தம் கொடுக்கும் விடயத்தில் சர்வதேச சமூகத்தின் அழுத்தமும் கண்காணிப்பும் அவசியமானது என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். அத்துடன் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கம் மேலும் விரிவடைய வேண்டுமெனறு இந்தியா எதிர்பார்ப்பதை தாம் வரவேற்பதாகவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேசத்தின் அழுத்தம் இலங்கை அரசு மீது பிரயோகிக்கப்பட வேண்டுமெனறு சுமந்திரன் கூறியுள்ளமையை பார்க்கும்போது அவர் உக்ரைன் பிரச்னையை சரிவரப் புரிந்து கொள்ள தவறிவிட்டாரோ என்றே எண்ணத் தோன்றுகின்றது.

உக்ரைன்மீது ரஷ்யாவின் படையெடுப்பு கடந்த ஒரு வார காலத்துக்கும் மேலாக இடம்பெற்று வருகின்றது. ஒருபுறம் ரஷ்யாவின் கண்மூடித்தனமான தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் அதேசமயம் மறுபுறத்தே அப்பாவி உக்ரைன் மக்கள் செய்வதறியாது அயல்நாடுகளில் தஞ்சம் புகுந்து வருகின்றனர். வயது வேறுபாடின்றி உக்ரைன்வாசிகள் கடுங்குளிருக்கு மத்தியில் சாரை சாரையாக தமது நாட்டை விட்டு கையிலகப்பட்டவற்றோடு வெளியேற மைல்கணக்கான தூரம் கால்நடையாக வெளியேறி வருவதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இத்தகைய பரிதாபகரமான நிலவரம் 1995ஆம் ஆண்டு யுத்தத்தின் போது, வட பகுதி மக்கள் பாதுகாப்புக் கருதி யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்து தென்மராட்சி பிரதேசத்தை நோக்கி கால்நடையாக நடந்து சென்றமையையே நினைவூட்டுவதாக அமைந்திருந்தது.

இவ்வாறு சென்றபோது பல வயோதிபர்கள் இடைநடுவில் மயங்கி விழுந்து உபாதைக்குள்ளாகி இறந்த சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன. எனவே 1995ஆம் ஆண்டு வடபகுதி இடப்பெயர்வை ஒத்ததாகவே உக்ரைன் அவலங்களும் விளங்குகின்றன. இதுதவிர, பதினாறு வயதுக்கு மேற்பட்டவர்கள் ரஷ்ய இராணுவத்தை எதிர்த்து போராட உக்ரைனிலேயே தங்கியிருக்கமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதன்காரணமாக நல்ல உடல்வாகுவான ஆண்கள் கண்ணீரோடு தமது உறவுகளுக்கு விடைகொடுக்கும் காட்சிகளும் பதிவாகியுள்ளன.

இந்தக் கட்டத்திலேயும் சர்வதேச சமூகம் வெறுமனே ஓர் அவதானியாக இருப்பதையே காணமுடிகின்றது. உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி சர்வதேச சமூகத்தை நம்பி ஏமாந்துள்ளமையை கவலையோடு தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவில் நேட்டோ அமைப்பின் ஆயுதப்படைகள் நிலைகொண்டுள்ளன. ஆனால், அவை ரஷ்ய - உக்ரைன் மோதல் தொடர்பாக பார்வையாளராக மட்டுமே



இருந்து வருகின்றன. ஐரோப்பாவில் வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் (NATO) படைகள் தமது சார்பான நாடுகளை பாதுகாக்கவே நிலைகொண்டுள்ளன. ஆனால், உக்ரைன் விடயத்தில் நேட்டோ நாடுகள் அமைதி காப்பது வியப்பளிப்பதாகவே இருக்கின்றது.


இந்நிலையில், இலங்கை அரசுமீது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கொண்டு வந்திருந்த 46-1 தீர்மானத்தை அமுலாக்கவும் இலங்கையை கண்காணிக்கவும் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு அவசியம் தேவை என்று எம். ஏ. சுமந்திரன் கூறியிருப்பது வேடிக்கையானதாகவே இருக்கின்றது.

சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரை தனது நலன்களையே எப்போதும் எங்கேயும் முதன்மைப்படுத்துவதாகவே நடந்து கொள்ளும். இதனையே ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்கூட தமது உக்ரைன்மீதான படையெடுப்பு குறித்து தெரிவிக்கையில் குறிப்பிட்டிருந்தார். அழகாக இருந்த ஈராக் தேசத்தினுள் நுழைந்து அந்த நாட்டை அமெரிக்கா சீரழித்தபோது சர்வதேச சமூகம் என்ன செய்து கொண்டிருந்தது என்று விளாடிமிர் புடின் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்நிலையில், சர்வதேசத்தை அதிகமாக நம்புவது எத்தகைய பயனையும் கொண்டு வரப்போவதில்லை. இதற்கு கடந்த காலங்களில் சர்வதேச அரங்கில் இடம்பெற்ற சம்பவங்களே நல்ல உதாரணங்களாக இருக்கின்றன.

இதேவேளை, இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரச்னையை பொறுத்தவரை 13ஆவது திருத்தச் சட்டமே ஓர் ஏற்புடைய தீர்வாக இருக்கின்ற நிலையில் இந்தியாவால் மட்டுமே ஓர் உறுதியான தீர்வுக்கு வழிகோல முடியும். அத்துடன் இலங்கை வடக்கு - கிழக்கு பிரச்னையில் இந்தியாவைமீறி சர்வதேச சமூகம் தலையிடுமென எதிர்பார்க்க முடியாது. இதற்கு இந்தியாகூட ஓர் எல்லைக்கு அப்பால் செல்வதற்கு சர்வதேச சமூகத்தை அனுமதிக்காது. இலங்கையில் நோர்வேயின் அனுசரணையோடு இடம்பெற்ற சமரச முயற்சிகள் இதற்கு நல்ல உதாரணமாகும். அத்துடன், தற்போதைய உக்ரைன் விவகாரம் இனிவருங்காலங்களில் சர்வதேச சமூகத்தை அளவுக்கதிகமாக நம்புவதில் எவ்வித பயனும் இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மாசி - 08 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம் - மாசி 24
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : சஷ்டி




**மேடம்**
குடும்பத்தில் எதிர்பார்த்த நல்ல விஷயம் நிறைவேறும். பொறுமையுடன் எந்தவொரு விஷயங்களையும் அணுகி வெல்வீர்கள். பணி பற்றிய திட்டம் நிறைவேறும். கடன் கொடுக்கவேண்டாம்.

**இடபம்**
ஊக்கத்துடன் செயல்பட்டு நன்மை பெறுவதால் உற்சாகம் கூடும். கடன் விஷயத்தில் கவனமாக இருக்கவும். பணி சிறக்கும். வீண் செலவுகள் ஏற்படும். வியாபாரம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்**
எதிர்பாராத விஷயம் இன்று நடக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தினரின் ஆதரவு மன உற்சாகம் தரும். மனஅழுத்தம் ஏற்பட்டாலும் அதை சமயோஜிதமாக சமாளிப்பீர்கள்.

**கடகம்**
உடன் பிறந்தவர்களுக்கு ஏற்பட்ட சிறு சிரமத்தைத் தீர்ப்பீர்கள். பொறுமை மிக அவசியம். ஆர்வத்துடன் பிறருக்கு உதவுவீர்கள். தேவையான பணம் கைக்கு வருவதற்கு பலர் உதவுவார்கள்.

**சிம்மம்**
நல்ல காரணத்தினால் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். குழந்தைகளின் விருப்பத்தை நிறைவேற்றுகையில் கடுமை காட்ட வேண்டாம். தாய் வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி**
குடும்பத்தினரை அனுசரித்து சென்று நன்மை காண்பீர்கள். நீங்கள் முன்பு செய்த உதவிக்குப் பாராட்டை எதிர்பார்க்க வேண்டாம். சுபச்செலவுக்கு வாய்ப்பு என்பதால் அதற்கு தயாராக இருங்கள்.

**துலாம்**
நீங்கள் புதிய முயற்சிகளில் ஈடுபடுவதை தவிர்க்க இயலாது. அலைச்சல், செலவு ஏற்படும். உறவினரது செயலை இயல்பாக ஏற்பீர்கள். சகோதர சகோதரிகளால் ஏற்பட்டிருந்த பிரச்னை தீரும்.

**விருட்சிகம்**
மனப்பக்குவத்தால் எதையும் சமாளிப்பீர்கள். யாரிடமும் கடன் வாங்காதீர்கள். நண்பர்கள் உங்களிடம் ரகசியத்தை பகிர்ந்து கொள்வர். சரிவுகளை சமாளித்து வெற்றிப்பாதையை நோக்கிச் செல்வீர்கள்.

**தனுசு**
எதிர்பாராத பணவரவு உண்டாகும். பெண்களால் சிறு தொல்லை வரும். பெண்கள் தொடங்கும் முயற்சிகள் ஓரளவு வெற்றி தரும். நன்மை சிறிதளவு தள்ளிப்போனாலும் வெற்றியாக முடியும்.

**மகரம்**
குடும்பத்தில் முன்பு இழந்திருந்த நிம்மதி பிள்ளைகளால் கிடைக்கும். இதுவரை இருந்த பொருளாதார பிரச்னைகள் குறையும். வீடு, பிளாட் வாங்கத் திட்டமிட்டவர்களுக்கு திட்டம் நிறைவேறும்.

**கும்பம்**
சமாளிக்கும்படியான சிறு செலவுகள் உண்டாகும். நீங்கள் மதிக்கும் மேலதிகாரிகளை சந்தித்து மகிழ்ச்சி அடைவீர்கள். மன சங்கடம் நீங்கும். முன்னேற்றம் அடைவீர்கள்.

**மீனம்**
அளவுக்கு அதிகமாக யாரிடமும் நெருங்கிப்பழக வேண்டாம். கடந்த இரண்டு நாட்களாக இருந்து வந்த குழப்பம் ஒன்று தீரும். புதிய நபரின் அறிமுகம் கிடைக்கும். மனஅமைதி கூடும்.

# துணையில்லாமல் நடக்க முடியாத நிலையில் ஜெயலலிதா இருந்தார்

## ஜெயலலிதா மரணம் குறித்த விசாரணையில் வாக்குமூலம்

*சென்னை, பெப். 08*

முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு தலை சுற்றல், மயக்கம், துணையின்றி நடக்க முடியாத சூழல் ஆகிய பிரச்சினைகள் இருந்தன என அப்பல்லோ மருத்துவர் ஒருவர் நேற்று பரபரப்பான வாக்குமூலம் அளித்துள்ளார்.

ஜெயலலிதா உடல்நிலை பாதிப்பால் 75 நாட்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 2016-ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி காலமானார். இந்த நிலையில் இவரது மரணத்தில் மர்மம் இருப்பதாக மக்கள் பலர் தங்கள் கருத்துகளை கூறியதையடுத்து ஆறுமுகசாமி ஆணையத்தை அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டது.

இதன்படி ஜெயலலிதாவின் உறவினர்கள், பாதுகாவலர்கள், மருத்துவர்கள், அரசு உயர் அதிகாரிகள் என இதுவரை 150-க்கும் மேற்பட்டோர் ஆறுமுகசாமி ஆணையத்தின் முன் ஆஜராகி விளக்கமளித்தனர். அப்பல்லோ மருத்துவர்கள் 11 பேர் விசாரணைக்கு நேற்று ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

ஆணையத்திடம் டாக்டர் பாபு மனோகர் வாக்குமூலம் அளித்தார். அதில், பின்வரும் தகவல்களை அவர் தெரிவித்தார். 2016-இல் முதல்-அமைச்சராக ஜெயலலிதா பதவி ஏற்கும் நாளுக்கு முன்னதாகவே தலை சுற்றல், மயக்கம் இருந்தது.

தினமும் 16 மணி நேரம் வேலை இருப்பதாக கூறிய ஜெயலலிதா ஓய்வெடுக்க மறுத்தார். சில மருந்துகளை பரிந்து ரைத்ததோடு சில



உடற்பயிற்சி களை செய்யுமாறு பரிந்துரைத் தேன். மருத்துவர் சிவக்குமார் அழைத்தனின் பேரில் பதவி ஏற்புக்கு முந்தைய நாள் போயஸ் தோட்டத்தில் ஜெ.சந்தித்தேன்.

யாருடைய துணையில்லாமல் நடக்க முடியாத சூழல் ஜெயலலிதாவுக்கு இருந்தது.

சிறுதாவூர் அல்லது ஊட்டி சென்று சில நாட்கள் ஓய்வு எடுக்க ஜெயலலிதாவுக்கு பரிந்துரைத்தேன். முதல் நாள் விசாரணையில் அப்பல்லோ மருத்துவர்கள் நேரில் ஆஜராகி பரபரப்பு வாக்குமூலம் அளித்தனர். விசாரணை தொடர்ந்து நடைபெறும்.

# அணை விவகாரத்தை அரசியலாக்குவது விவசாயிகளுக்கு நன்மையைத் தராது!

## தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை கருத்து

*சென்னை, பெப். 08*

மேகதாட்டு அணை விவகாரத்தை அரசியலாக்குவது விவசாயிகளுக்கு நன்மையை ஏற்படுத்தாது என்று தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணா மலை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

"மேகேதாட்டு அணை விவகாரத்தில் கர்நாடக பா.ஜ.கவை கண்டித்து அறிக்கை கொடுத்திருக்கும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ,



தங்கள் கூட்டணியில் இருக்கும் காங்கிரஸ் கட்சியை ஏன் கண்டிக்கவில்லை? தொடக்கத்தில் மேகேதாட்டுவில் அணை கட்ட கிளம்பியதே அப்போது இருந்த காங்கிரஸ் ஆட்சிதானே.

கர்நாடக மாநிலத்தில் உள்ள கட்சிகள் அந்த மாநில நலனுக்கு மாறுபாடாக பேச முடியாது. ஆனால், தமிழகம், கர்நாடகா, அகில இந்திய காங்கிரஸ் தலைவர்கள் இந்த விவகாரத்தில் என்ன பதில் சொல்கின்றனர்? அவர்களுக்கு வைகோவின் பதில் என்ன? ஒவ்வொரு மாநிலத்துக்கு தேவையான நலத் திட்டங்களை உருவாக்குவது அந்தந்த மாநிலத்தின் உரிமை. அது பிற மாநிலத்தின் உரிமைகளை பாதிக்காத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியது மத்திய அரசின் கடமை. மேகேதாட்டு விவகாரத்தை அரசியலாக்குவது கர்நாடக விவசாயிகளுக்கும், தமிழக விவசாயிகளுக்கும் நன்மையை தரப்போவது இல்லை."

# தொண்டர்களின் எதிர்பார்ப்புகள் நிச்சயம் விரைவில் நிறைவேறும்

## சசிகலா அறிவிப்பு



*சென்னை, பெப். 08*

தொண்டர்களின் எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள், முழக்கங்கள் நிச்சயம் நிறைவேறும் என வி.கே.சசிகலா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், எத்தகைய சோதனைகள் வந்தாலும், அவற்றையெல்லாம் முறியடித்து, கழகத் தொண்டர்கள் அனைவரும் ஒற்றுமையாக உறுதியோடு இருந்து நம் புரட்சித் தலைவர், புரட்சித்தலைவியின் வழியில் கழகத்தை காப்போம், கவலை வேண்டாம். என கூறியுள்ளார். மேலும் அவர், தொண்டர்களின் எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள், முழக்கங்கள் நிச்சயம் நிறைவேறும். தொண்டர்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கை வீண் போகாத வகையில் தமிழக மக்களுக்காக எஞ்சியுள்ள வாழ்நாட்களை அர்ப்பணிப்பேன் எனவும் தெரிவித்துள்ளார். தொண்டர்களைச் சந்திப்பதற்கான சுற்றுப்பயணத்தை நிறைவு செய்துள்ள நிலையிலேயே இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

# சென்னை புத்தக கண்காட்சியில் 12 கோடிக்கு நூல்கள் விற்பனை

*சென்னை, பெப். 08*

தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் சென்னை புத்தகக் காட்சி நேற்று முன்தினம் முடிந்த நிலையில், சுமார் 15 லட்சம் பார்வையாளர்கள் வந்ததாகவும், 12 கோடிரூபா (இந்திய ரூபா) மதிப்பு புத்தகங்கள் விற்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த புத்தகக் காட்சி பெப்ரவரி 16ஆம் திகதி தொடங்கியது. புத்தகக் காட்சியில் 800 அரங்குகள் இடம் பெற்றன. இவற்றில் சுமார் ஒரு லட்சம் தலைப்பில் புத்தகங்கள் இடம் பெற்றிருந்தன. தமிழகம் தவிர மும்பை, கேரளா, கர்நாடகா மற்றும் டில்லியில் இருந்து புத்தக விற்பனையாளர்கள் இந்த கண்காட்சியில் பங்கேற்றனர். தமிழக அரசின் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், ஒன்றிய அரசின் சாகித்ய அகாடமி, நேஷனல் புக் டிரஸ்ட் பப்ளிகேஷன் டிவிஷன், தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம், மற்றும் தொல்லியல் துறை ஆகிய நிறுவனங்களும் இந்தக் காட்சியில் இடம் பெற்றிருந்தன.

## இயேசு கற்றுத்தரும் செபம்



தவக்கால பக்தி முயற்சிகளில் ஒன்றான செபம் பற்றி புனித மத்தேயு இன்றைய நற்செய்தியிலே குறிப்பிடுகின்றார். செபம் செய்யும் முறை பற்றிக் கூறும் இயேசு செபங்களில் எல்லாம் மெலான செபத்தையும் கற்றுத் தருகின்றார்.

“கேளுங்கள் கொடுக்கப்படும்” (மத்தேயு 7:7) என்று கூறிய இயேசு எப்படி செபிக்க வேண்டும் என்று கற்றுத் தருகின்றார். ஆண்டவர் நம் செபத்தைக் கேட்பார் என்ற நம்பிக்கை இல்லாது செபித்தலையும் ஆண்டவருக்கே தேவைகள் எல்லாம் தெரியாது என்று எண்ணிய நிலையிலே திரும்ப திரும்ப தேவைகளை சொல்லி செபித்தலையும் தவிர்க்க வேண்டும்.

செபத்தின் வல்லமை அதை திரும்பத் திரும்ப சொல்வதிலன்று ஆழ்ந்த நம்பிக்கையோடு என விருப்பப்படியன்று. உமது விருப்பப்படியே நிகரட்டும் (மத் 2038) என்று சொல்லக் கூடிய மன நிலையைப் பொறுத்து அமைவதாகும். அதிகம் பேசுவதிலன்று. ஆழப் பேசுவதில்தான் செபம் பயனுள்ளதாய் அமையும் என்பதை உணர்ந்து பிள்ளைகளுக்குரிய மனநிலையோடும் நம்பிக்கையோடும் இயேசு நமக்கு கற்று தந்த செபமாகிய விண்ணகத்தில் இருக்கும் எம் தந்தையே என்ற செபத்தை நாளும் பொழுதும் செபிப்போம்.

**அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா**

# இந்தியா வழங்கும் கடன் மூலம் இலங்கைக்கு டீசல், பெற்றோல்!

*எரிசக்தி அமைச்சர் கூறுகிறார்*



**கொழும்பு, மார்ச் 08**

**இந்தியா வழங்கும் கடன் வசதியின் கீழ் எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதி நாட்டுக்கு எரிபொருள் கிடைக்கும் என எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.**

இலங்கைக்கு மசகு எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கான உத்தரவை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் முழு கொள்ளளவில் இயங்கி வருவதாகவும் அமைச்சர் காமினி குறிப்பிட்டார்.

சுத்திகரிப்பு நோக்கங்களுக்காக நிலையங்களில் 208,000 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் இருப்பை வைத்திருக்க முடியும்.

இதனை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கவனித்து வருகிறது. நுகர்வோர் மற்றும் மின்சார சபைக்கு எரிபொருள் வழங்குவதில் சிக்கல் இருக்காது என்றும் அவர் கூறினார். (அ)

# ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேக்கரிகள் எரிபொருள் தட்டுப்பாட்டினால் மூடல்!

*கொழும்பு, மார்ச் 08*

எரிபொருள் தட்டுப்பாட்டால் நாடு முழுவதும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேக்கரிகள் முடப்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்களில் மேலும் பல பேக்கரிகளை மூடும் நிலை உருவாகும் எனவும் அவர் கவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு தற்போது சந்தித்து வரும் பாரிய பொருளாதாரப் பிரச்னையால் பல தொழில் துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அந்தவகையில், பேக்கரி உற்பத்தித் தொழிலும் மிக மோசமான பாதிப்பை சந்தித்துள்ளது.

பேக்கரி உற்பத்திப் பொருட்களுக்குத் தேவையான கோதுமை மா, முட்டை, பாம் எண்ணெய் உள்ளிட்ட மூலப் பொருட்களுக்கான விலை அதிகரித்துள்ளது.

இந்நிலையில் எரிபொருள் விலையேற்றம், தட்டுப்பாடு நிலவுவதுடன் தற்போது மின் வெட்டும் இடம்பெறுகிறது.

இதன் காரணமாக பேக்கரி உற்பத்திகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் நாடுமுழுவதும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேக்கரிகள் முடப்பட்டுள்ளன.

இந்த அசாதாரண சூழல் தொடருமாயின், இனிவரும் காலங்களில் நாடுமுழுவதும் உள்ள பேக்கரிகள் மூடப்படும் சூழ்நிலையும் உருவாகும்.

ஏலவே, நாடுமுழுவதும் இரண்டில் ஒருபகுதியளவான எமது நடமாடும் சிற்றுண்டி வண்டிகளின் எண்ணிக்கையும் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொருட்களுக்கான விலையேற்றம் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு, மின் துண்டிப்பு உள்ளிட்ட காரணங்களால் பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் காலங்களில் மக்கள் எமது உற்பத்திப் பொருட்களை வாங்காமலும் கூட விடலாம்- என்றார். (அ)





# மிகப் பெரிய சிமெந்து தொழிற்சாலை அம்பாந்தோட்டையில் திறந்து வைப்பு

*கொழும்பு, மார்ச் 08*

அம்பாந்தோட்டை மிரிஜ்ஜவிலவில் அமைக்கப்பட்ட அதிநவீன வசதிகளைக் கொண்ட பாரிய சிமெந்து தொழிற்சாலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்க்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்க்ஷ ஆகியோர் தலைமையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

மாகம்புர லங்வா தொழிற்சாலையானது 63 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இது அந்த வலயத்தின் மிகப்பெரிய சிமெந்து உற்பத்தித் தொழிற்சாலையாகும்.

முதற்கட்டமாக வருடாந்தம் 2.8 மில்லியன் மெற்றிக்தொன் சிமெந்து உற்பத்தி செய்யப்படும். ஐரோப்பாவில் உற்பத்தி செய்யப்படும் நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கொழும்புத் துறைமுக நகர் மற்றும் அதிவேக நெடுஞ்சாலை உள்ளிட்டு முன்னணி நிர்மாண வேலைத்திட்டங்களுக்குத் தேவையான சிமெந்து வழங்கலை இந்தத் தொழிற்சாலையே மேற்கொள்ளும்.

மேலும் இந்தத் தொழிற்சாலையின் உற்பத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து நாட்டின் சிமெந்துத் தட்டுப்பாடு இல்லாமல் போகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# விமல்,கம்மன்பிலவின் பாதுகாப்பை நீக்காதிருக்க பிரதமர் ஆலோசனை

*கொழும்பு, மார்ச் 08*

அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சர்களுக்கான பாதுகாப்பை தொடர்ந்தும் வழங்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 பங்காளிக் கட்சிகளும் இணைந்து ‘முழு நாடும் சரியான பாதையில்’ என்ற தொனிப்பொருளில் கடந்த 2ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாட்டில் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்ததையடுத்து, முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் கடந்த 3ஆம் திகதி அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர்.

அமைச்சுப் பதவி கிடைத்தமைக்கு அமைய எஸ்.பி. திசாநாயக்கவுக்கு சிரேஷ்ட உறுப்பினர் அடிப்படையில் முன் வரிசையில் அமர்வதற்கு ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தின் பிரதான படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் கடந்த 03ஆம் திகதி ஜனாதிபதியால் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர். இதனால், இதுவரை பாராளுமன்றத்தில் முன் வரிசையில் அமர்ந்திருந்த விமல் வீரவன்ஸ மற்றும் இரண்டாம் வரிசையில் அமர்ந்திருந்த உதய கம்மன்பில ஆகியோருக்கு இன்று ஆரம்பமாகும் சபை அமர்வில் நான்காவது வரிசையில் அமர்வதற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவுக்கு ஆளுந்தரப்பின் நான்காவது வரிசையில் 73 ஆவது ஆசனமும் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவுக்கு 78ஆவது ஆசனமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் அமைச்சராக பதவியேற்ற அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கவுக்கு ஆளுந்தரப்பின் முன் வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஆளுந்தரப்பின் நான்காவது வரிசையில் அமர்ந்திருந்த இவருக்கு,இன்று ஆரம்பிக்கும் சபை அமர்வில் முன் வரிசையின் இரண்டாவது ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, போக்குவரத்து அமைச்சராக பதவியேற்ற அமைச்சர் திலும் அமுனுகம, மூன்றாவது வரிசையிலிருந்து இரண்டாவது வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, தற்காலிகமாக பதவி விலகியிருந்த இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவுக்கும் இரண்டாம் வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. (அ)

## 24 மணித்தியாலத்தில் 13 வாகன விபத்துக்கள்!

கொழும்பு, மார்ச் 08

நேற்றுக் காலை வரையான கடந்த 24 மணித்தியால காலப் பகுதியில் இடம்பெற்ற 13 வாகன விபத்துக்களில் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

பூவரசங்குளம், கிரிபாவ, இங்கிரிய, பொரளை, பதியத்தலாவ மற்றும் ஹபரண ஆகிய பிரதேசங்களில் இந்த விபத்துக்கள் இடம்பெற்றிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கு மேலதிகமாக ஆனமடுவ, நவகுருந்துவத்த, இரத்தினபுரி, அங்குணகொலபெலச, கிளிநொச்சி மற்றும் வெலிமட ஆகிய பிரதேசங்களில் ஏனைய விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

இதேவேளை, மன்னார் - வவுனியா வீதியில் தனியார் பஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதியதில் தந்தையும் மகனும் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துக்களில் 12 வயதிற்கும் 78 வயதிற்கும் இடைப்பட்டோரே உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துக்களில் உயிரிழந்த பெரும்பாலானோர் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர்கள் என பொலிஸார் மேலும் கூறினர். (அ)



# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 08

**தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும், அரசியல் கைதிகளை நிபந்தனை இல்லாமல் விடுதலை செய்ய வேண்டும், தமிழின படுகொலைக்கான சர்வதேச நீதி வேண்டும், பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கு போன்ற கோரிக்கைகளை முன்வைத்து யாழ். மத்திய பஸ் நிலைய முன்றலில் இந்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (அ-03)






## தேறாங்கண்டல் கிராமத்தில் 75 குடும்பங்களுக்கு உதவிகள்

முல்லைத்தீவு, மார்ச் 08

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள துணுக்காய் பிரதேச செயலாளர் நிர்வாக ஆளுகைக்கு உட்பட்ட தேறாங்கண்டல் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 75 குடும்பங்களுக்கு 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உலர் உணவுப்பொருட்களும், 75 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்பட்டன.

தேறாங்கண்டல் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ அதிசய முருகன் ஆலயத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தின் இயக்குநர் மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாக சென்று வழங்கினார்.

அவர்களுடன் துணுக்காய் பிரதேச சபை உபதவிசாளர் த. சிவகுமாரன், சமூக செயற்பாட்டாளர் தயாபரன், முன்னாள் நகரசபை உறுப்பினர் கிசோர், ஆலயப் பரிபாலன சபையினர் மற்றும் ஆச்சிரம தொண்டர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர். (அ)

## மாணவருக்கான பஸ் சேவை ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 08

மாணவர்களுக்கான அனைத்து சிசு செரிய என்ற பஸ் சேவைகளும் நேற்று தொடக்கம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை போக்குவரத்து சபையின் போக்குவரத்து பிரிவை சேர்ந்த பிரதி பொது முகாமையாளர் பண்டுக்க சுவர்ண அங்ஷ தெரிவிக்கையில்,

அனைத்து டிப்போ முகாமையாளர்களுக்கும் இது தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து பஸ் சேவைகளுக்கு தேவையான எரிபொருள் டிப்போக்களில் உள்ளது-என்றார். (அ)

## சகோதரர்களுக்கு இடையே நடந்த மோதலில் ஒருவர் பலி!

கொழும்பு, மார்ச் 08

கொக்கல - மோதரகொட பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வந்த இருவருக்கும் இடையில் சிறிது காலமாக, படகு தொடர்பான தகராறு ஏற்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர், நேற்று அதிகாலை மதுபோதையில் பிரவேசித்து அவரது சகோதரர் மீது தாக்குதலை மேற்கொண்ட பின்னர் கொக்கல ஓயாவுக்குள் தள்ளியதாக குறிப்பிடப்படுகிறது.

இதனையடுத்து காயமடைந்த நபர், பிரதேசவாசிகளால், மீட்கப்பட்டு கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (அ)

## மன்னாரில் ரூ. 1 கோடி பெறுமதியான போதைப்பொருளுடன் ஒருவர் கைது!

மன்னார், மார்ச் 08

மன்னார் இராணுவப் புலனாய்வாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப் படையுடன் இணைந்து மன்னார் தாராபுரம் பிரதான வீதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஐஸ் ரக போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மன்னார் எருக்கலம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

குறித்த நபரிடம் இருந்து சுமார் 1 கோடி ரூபா பெறுமதியான ஒரு கிலோ ஐஸ் போதைப் பொருள் இவ்வாறு மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர் கைப்பற்றப்பட்ட ஐஸ் ரக போதை பொருளுடன் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் வீடு மீது மீளவும் தாக்குதல்!

யாழ்ப்பாணம், மார்ச் 08

வலி. தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜோன் ஜிப்ரிக் கோவின் வீட்டில் நேற்று முன்தினம் மாலையும் தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அரசாங்கத்துடன் தொடர்புடைய கட்சியின் பெயரைச் சொல்லி ஜிப்ரிக்கோவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த நிலையில் ஜிப்ரிக்கோ உட்பட அவரது குடும்பத்தினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு இளவாலை பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்கப்பட்டனர் என குற்றம் சாட்டப்பட்டது.

பின்னர் தாக்குதலுக்குள்ளான அனைவரும் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் அவரது ஒரு சகோதரியும் தந்தையும் தாயும் மல்லாகம் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஜிப்ரிக்கோவின் வீட்டுக்கு சென்ற வாள்வெட்டுக் கும்பல் ஒன்று அவரது உடைமைகளை சேதமாக்கியதுடன், செல்லமாக வளர்த்த கிளியையும் வெட்டி வீசி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜிப்ரிக்கோவின் வீட்டில் தாக்குதல் நடத்திய அதே பகுதியை சேர்ந்த மூவர் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## புதிய அமைச்சர்கள் நேற்று தமது கடமைகளை ஏற்றனர்!

கொழும்பு, மார்ச் 08

அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்களாக பதவியேற்ற அமைச்சர்கள் நேற்று தமது கடமைகளை பொறுப்பேற்றனர்.

இதற்கமைய, முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் கைத்தொழில் அமைச்சர் பதவிக்கு புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க நேற்று கடமைகளை பொறுப்பேற்றார்.

அதேநேரம், உதய கம்மன்பில நீக்கப்பட்டதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு புதிய வலுசக்தி அமைச்சராக நியமிக்கப்பட்ட காமினி லொக்குகே நேற்று முற்பகல் வலுசக்தி அமைச்சில் தமது கடமைகளை பொறுப்பேற்றார்.

அத்துடன் போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள திலும் அமுனுகம மற்றும் தற்காலிகமாக தமது பதவியில் இருந்து விலகிய இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்ணான்டோ ஆகியோரும் நேற்று தமது கடமைகளை பொறுப்பேற்றனர். (அ)

# சஜித், அநுரவுடன் கூட்டணி இல்லை

## வாசுதேவ திட்டவட்டம்



கொழும்பு, மார்ச் 08

**ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி. என்பன அழைப்பு விடுத் தால்கூட அக்கட்சி களில் இணையும் எண்ணம் எமக்கு இல்லை _ என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

மேற்படி கட்சிகளுக்கும் எமது கொள்கைகளுக்கும் இடையில் பாரிய வித்தியாசம் காணப்படுகின்றது. அந்தக் கட்சிகளுடன் பேசவேண்டிய தேவை எமக்கு கிடையாது. அழைப்பு வந்தால்கூட இணைந்து பயணிக்கும் திட்டம் இல்லை.

தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதியை சந்திக்கவும் நாம் விரும்பவில்லை. பிரதமரிடம் இருந்து அழைப்பு வந்துள்ளது. அவரை உரிய நேரத்தில் சந்திப் போம். பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சி பக்கம்தான் நாம் அமர்வோம்-என்றார். (அ)

# டொலர் தட்டுப்பாடு காரணமாக 3 எரிவாயு கப்பல்கள் நடுக்கடலில்

கொழும்பு, மார்ச் 08

சமையல் எரிவாயு சிலிண் டர்களுடன் 3 கப்பல்கள் துறை முகத்தில் நங்கூரமிடப்பட்ட நிலையில் டொலர் இல்லா ததால் சிலிண்டர்களை இறக்க முடியாதுள்ளதாக லிற்றோ காஸ் நிறுவனம் தெரிவித்துள் ளது.

அதனால் கடந்த முதலாம் திகதி முதல் நாட்டில் எந்த பிரதேசத்திற்கும் சமையல் எரி வாயு சிலிண்டர்களை பகிர்ந்த ளிக்க முடியாமல்உள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்தது.

மேற்படி மூன்று கப்பல்க ளும் கடந்த முதலாம் திகதியி லிருந்து ஆறு தினங்களாக துறைமுகத்தில் நங்கூரமிடப் பட்ட நிலையில் ஒவ்வொரு கப்பலுக்கும் நாளாந்தம் 15,000 அமெரிக்கன் டொலர் தாம தத்திற்கான கட்டணம் வழங்க நேரிட்டுள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. எரிபொருள் கப்பல் துறைமுகத் தில் நங்கூடரமிடப்பட்டுள்ள நிலையில் அதற்கு செலுத்த வேண்டிய டொலர் இதுவரை கிடைக்கவில்லை.

நாளாந்தம் சுமார் 80,000 சமையல் எரிவாயு சிலிண்டர் கள் சந்தைக்கு விநியோகிக்கப் பட்டு வந்தன. அந்த நிலையில் கடந்த ஆறு தினங்களாக எந்த வொரு எரிவாயு சிலிண்டரும் சந்தைக்கு விநியோகிக்கப்பட வில்லை. இதனால் மீண்டும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு நாட்டில் உருவாகியுள்ளது என் றும் அந்த நிறுவனம் தெரிவித் துள்ளது. (அ)

# புலிகளுடன் நேரில் போரிட்டாரென கூறும் கோட்டாபய எம்மை கண்டு அஞ்சுகிறாரா?

## கேள்வி எழுப்புகிறார் ஹிருணிக்கா



கொழும்பு, மார்ச் 08

புலிகளுடன் நேருக்கு நேர் போரிட்டதாக கூறிக்கொள் ளும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, எம்மை சந்திக்க தயங்குவது ஏன் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணி கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஐக்கிய மகளிர் அணியின் ஏற்பாட்டாளர் ஹிரு ணிக்கா கூறியவை வருமாறு:

ஜனாதிபதி செயலகம் செல்லாமல், ஜனாதிபதி வசிக் கும் வீடு ஏன் சுற்றிவளைக்கப் பட்டது என கேட்கின்றனர். ஜனாதிபதி செயலகம் சென் றால் நடக்கபோவது எதுவும் இல்லை. ஜனாதிபதிக்கு பிரச்னை தெரிய வரப்போவ தும் இல்லை. மனுக்கள் கொடுத்தாலும் அவை குப்பைத் தொட்டியில் வீசப்படும்.

எனவே, ஜனாதிபதி வசிக் கும் வீடு முன்னால் சென்றால் குறைந்தபட்சம் எமது குரலா வது கேட்டும், பிரச்னை தெரிய வரும். ஜனாதிபதிக்கு புரியா விட்டால்கூட பெண்ணான ஜனாதிபதியின் பாரியாருக்கா வது, மகளிர் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தெரியவரும். ஆனால் நாம் அங்கு சென்ற வேளை ஜனாதிபதியும், பாரி யாரும் அநுராதபுரம் சென்றுள் ளனர். பாதுகாப்பு அதிகாரி ஒருவர் இதனை தெரிவித்தார். நாம் நாட்டு பிரச்னையை சொல்வதற்கு சென்றவேளை, ஜனாதிபதி ஜோதிடம் பார்க்க அநுராதபுரம் சென்றுள்ளார்.

அரச சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கவோ அல்லது ஜனா திபதியுடன் தனிப்பட்ட ரீதி யில் முரண்படவோ நாம் செல்ல வில்லை. பேச்சு நடத்தவே சென்றோம். ஜனாதிபதியாக இருந்தவர் இராணுவத்தில் இருந்தவர். புலிகளுடன் நேருக்கு நேர் போரிட்டவர் எனக் கூறிக் கொள்பவர். அப்படியான ஒரு வர் எம்மை சந்திக்க தயங்குவது ஏன்? அத்துடன், நாட்டு பிரச் னையை எடுத்துரைக்கசென்ற எம்மை, குற்றவியல் சட்டத் தின்கீழ் கைது செய்வதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது என தகவல் கிடைத்துள்ளது- என்றார் ஹிருணிக்கா. (அ)

# இந்த அரசை வீட்டுக்கு அனுப்ப மக்கள் தயார்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 08

"இந்த நாட்டிலே எதை எடுத்தாலும் "இல்லை" என்ற தொரு நிலைமையே உருவாகி யுள்ளது. இதற்கு அரசே பொறுப்புக்கூற வேண்டும். இப்படியானதொரு நிலைமை உருவாக்கிய அரசை வீட்டுக்கு அனுப்ப நாட்டு மக்கள் தயா ராகிவிட்டனர்." - இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப் பினருமான வீ. இராதாகிருஷ் ணன் தெரிவித்தார்.

நாட்டில் எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, நீண்டநேர மின்வெட்டு, பொருட்களின் விலையேற்றம் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலி யுறுத்தியும் ஹற்றனில் நேற்று முன் தினம் நடைபெற்ற போராட் டத்தில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் பெற்றோல் இல்லை. டீசலும் இல்லை. மின்சாரமும் இல்லை. இவை இல்லாததால் தொழிற்சாலை கள் இயங்கவில்லை. அதனால் முதலீட்டாளர்களுக்கு வரு மானம் இல்லை. ஊழியர்களுக் குச் சம்பளமும் இல்லை. அரிசி வாங்கக் காசு இல்லை. குடிப் பதற்குப் பால்மாவும் இல்லை. நாட்டில் எதற்கெடுத்தாலும் இவ்வாறு "இல்லை" என்ற தொரு நிலைமையே உருவாகி யுள்ளது.

அனைத்து வழிகளிலும் இந்த அரசு நாட்டு மக்களை வதைத்துக்கொண்டிருக்கின்றது. எனவே, இந்த அரசு பெரும் சாபக்கேடாகும். இந்த அரசை விரட்டியடிக்க மக்கள் தயா ராகிவிட்டனர். நாமும் அதற் குப் பேராதரவை வழங்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் நிச்சயம் நாம் நாட் டையும், மக்களையும் காப் போம்.

அதற்கான தேசிய வேலைத் திட்டம் எம்மிடம் உள்ளது- என்றார். (அ)

# விமல் வீரவன்ஸவின் வழக்கு விசாரணை திகதியிடப்பட்டது

கொழும்பு, மார்ச் 08

முன்னாள் அமைச்சரும், பாராளு மன்ற உறுப்பினருமான விமல் வீர வன்ஸ மற்றும் பிரதிவாதிகள் 6 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு, எதிர்வரும் மே மாதம் 30ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்படவுள்ளது. கொழும்பு நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித் துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் இளவரசர் செயிட் அல் ஹுசைன், கடந்த 2016 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது, கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு முன்பாக வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதற்காக அவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேலதிக நீதவான் சந்திம லியனகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, பிணையில் விடுவிக் கப்பட்ட முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ மற்றும் பிரதிவாதிகள் 6 பேர் நீதிமன்றில் முன்னிலையாகினர்.

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன் ஸவைத் தவிர, இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர, பாராளுமன்ற உறுப் பினர் மொஹமட் முஸம்மில் மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் முன்னாள் உறுப்பினர்களான வீரகுமார திஸாநாயக்க, பியசிறி விஜேநாயக்க மற்றும் ரொஜர் செனவிரத்ன ஆகியோர் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களாவார். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகம் மீது நேற்றுக் காலை முட்டை வீச்சு தாக்குதல்!

கொழும்பு, மார்ச் 08

புறக்கோட்டையில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகம்மீது நேற்று முட்டை வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் மதுர விதானகே தலைமையில் வந்த குழுவொன்றே இந்த தாக்குதலை நடத்தி யுள்ளது என குற்றஞ்சாட் டப்பட்டுள்ளது.

"நல்லாட்சியின் போது மக்களுக்கு செய்தது" என்ன என கேள்வி எழுப்பி மேற்படி அணியினர், சஜித் அணியின் கட்சி அலுவலகத்துக்கு முன்னால் போராட்டத்திலும் ஈடுபட்டனர். (அ)





எஸ்.டி..கணேசலிங்கம்






# பெண்களின் விடுதலைக்கான குரலாக மகளிர் தினம் அமைய வேண்டும்

**சமூக நீரோட்டத்தில் எமது பெண்களின் பங்களிப்பை உறுதி செய்வதற்கான வலுவான நட வடிக்கைகள் அத்தியவசிய மானது. இதில் மற்றுமொரு பக்கத்தை மறந்துவிட முடியாது அதுதான் ஜனநாயகத்தில் பங்குபற்றவும், பேரம் பேசவும், ஆண்களோடு அதிகார வெளியை பகிர்ந்துகொள்ளவும் எமது பெண்கள் வலுவான நிலையை அடைய வழியமைக்கவேண்டும்.**

இவ்வருடம் பெண்கள் தினத்தின் கருப்பொருள் “பேண்தகு தன்மைமிக்க நாளைக்கான இன்றைய பால்நிலை சமத்துவம்” என்பதாகும். இக்கருப் பொருளானது உலகலாவிய ரீதியில் அனைவருக்கும் பேண்தகு எதிர்காலம் ஒன்றை கட்டியெழுப்பும் நோக்கில் காலநிலை மாற்றத்திற்கு பழகிகொள்ளல், அதனை தடுத்தல் மற்றும் எதிர் வினையாற்றுவதில் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் வழங்கும் பங்களிப்பிற்கு அங்கிகாரம் அளிக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கையில் பல்துறை சார்ந்த பெண்களின் ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் பால்நிலை சமத்துவத்திற்காகவும் குரல் எழுப்புவதற்காக நாடளாவிய ரீதியில் அணிதிரலும் பெண்களில் மலை யக பெண்கள் விசேடத்துவமிக்கவர்களாக காணப்படு கின்றனர். ஏனெனில் மலையக பெண்களது அரசியல், சமூக, பொருளாதார, கலாசார விடயங்கள் முற்றிலும் மாறுபட்டதாகவும் மறுக்கப்பட்டதாகவும் இருப்பது இன்னும் வெளி உலகத்திற்கு வெளிச்சம் போட்டு காட்டப்படாததான திறைமறைவான விடயமாகவே இருந்து வருகின்றது.

கடந்த காலங்களில் பெருந்தோட்ட தொழில் துறை யில் தொழில் புரியும் பெண்களின் பிரச்சினைகளை மாத்திரமே பேசி வந்ததுடன், அதற்கு அப்பால் இங்குள்ள வீட்டு வேலை, ஆடை தொழிற்சாலை, கடை மற்றும் காரியாலயங்களில் பணிபுரியும் பெண்கள், புலம்பெயர் தொழிலாளர்கள், நுண்நிதி கடனால் பாதிக்கப்பட்ட பெண்கள், முறைசாரா தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள் உட்பட வீட்டு மனைவிகளாக இருப்பவர்கள் போன்ற பல்வகை துறை சார்ந்த பெண் கள் இக்கட்டமைப்பிற்குள் உள்வாங்கப்படுகின்றனர் என்ற உண்மையை வெளியே கொண்டுவருதல் முக்கியமா கின்றது.

பெருந்தோட்டப் பெண்கள் குடும்ப வன்முறைகள், சமூக வன்முறைகள் போன்றவற்றுக்கும் பெரிதும் முகம்கொடுக்கும் அதேவேலை கலாசார பின்னடைவை யும் எதிர்நோக்கி வருவது இவர்களின் மற்றுமொறு வளர்ச்சிப்படியின் தடைகளாக அமைகிறது. இவை களுடன் இவர்களுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமைகள் கூட சில வேலைகளில் தட்டிப்பறிக்கப் படுகிறது ஆகவே சமூக பொறுப்புவாய்ந்த நிறுவனங் களாக செயற்படும் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங் கள், சமூக மற்றும் சமய - பொது நிறுவனங்கள் இவர்க ளில் அக்கரை செலுத்துவது காலத்தின் கட்டாயமாகும். அத்துடன் வெறுமனே தோட்ட தொழிலாளர்கள் அல்லது சந்தா செலுத்துபவர்கள் என்றில்லாது சமூக கட்டமைப்பின் சரிபாதி பங்குதாரர்களாக இருப்பதை உறுதி செய்யவேண்டும். இச்சமூகத்தைச் சேர்ந்த ஏனைய பெண்கள் தொழில் புரியும் தொழில் நிறுவ னங்கள், அமைப்புக்கள் மற்றும் தனிநபர் சாலைகள் பற்றியும் நாம் கவனம் செலுத்துவது அவசியமாகும். அந்தவகையில் பெருந்தோட்டத் துறையை சேர்ந்த பெண்கள் ஈடுபாடு காட்டிவரும் வெளி நாட்டு வேலை வாப்பு, ஆடை தொழிற்சாலை, தனியார் நிறுவனங்கள், சிறு கைத்தொழில் உற்பத்திகள் மற்றும் சிறு முதலீட்டா ளர்களில் தங்கியிருக்கும் பெண்களின் நிலைப்பாட்டி லும் அக்கறை காட்டவேண்டியது சமூகத்தின் பொறுப் பாகும்.

இதைவிட இன்று மலையகத்தில் இருந்து வீட்டு பணியாளர்களாக வெளியிடங்களுக்கு செல்லும் பெண் களின் நிலை மிகவும் மோசமானதாக காணப்படுகின் றது. இவைகள் பற்றிய அன்மைகால செய்திகள் மிகவும் சிந்திக்கவும், செயற்படவும் தூண்டுகின்றது. இவர்க ளுக்கு தொழில் உரிமைகள், தொழில் பாதுகாப்பு, சம்பளம் காப்புறுதி என்பன இதுவரை உறுதிப்படுத் தப்படவில்லை. மாறாகப் பெண் சிறுவர்களை தொழி லுக்காக அமர்த்தி அவர்கள் மரணித்த சம்பவங்களும் இவ்வாறான சம்பவங்களுக்கு பின்னால் தரகர்களின் செயற்பாடுகள் இருந்துள்ளதையும் அவர்களின் எண் ணிக்கை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது,

அத்துடன் இன்றுவரை வீட்டுப் பணியாளர்கள் முறைசாரா தொழிலாளர்களாகவே கணிப்பீடு செய் கின்றனர். சர்வதேச தொழில் ஸ்தாபனம் தனது 100 ஆவது அமர்வில் வீட்டு வேலை தொழிலாளர்களுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கியுள்ளது. அன்றைய அச்சூழ லில் இலங்கை அரசும் அதற்கு ஆதரவாக வாக்களித் திருக்கின்றது. ஆனாலும் இன்னும் இலங்கை அரசாங் கம் இவர்களை சட்ட ரீதியாக அங்கீகரிக்காத நிலை காணப்படுவது வீட்டுப் பணியாளர்களையும் சர்வதேச சட்டங்களையும் உதாசீனம் செய்வதாகவே காணமுடி கின்றது. அத்துடன் தொழில் அமைச்சு இதன்பால் கவனம் செலுத்துதலை இன்னும் விரைவுபடுத்தவில்லை.

அத்துடன் முறைசாரா தொழிலாளர்களுடைய நிர்ணைக்கப்பட்ட வேலை நேரம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, அடிப்படை சம்பளம், தொழில் ஒப்பந்த நிர்ணயம், தொழில் பாதுகாப்பு மற் றும் பாதுகாப்பான வேலைத்தள சூழல் என்பன இல் லாதவர்களாக காணப்படுகின்றனர். ஆகவே இதன் விளைவு பாரதூரமானதாகவும் சமூக பிரச்னைகளாகவும் உருவெடுத்துள்ளதுடன், இத்தொழிலில் ஈடுபடுகின்ற வர்களில் அதிகமானோர் பெண்களாகவும் காணப்படு வது மற்றுமோர் முக்கிய விடயமாகும்.

முறைசாரா தொழிலாளர்களில் வீட்டு பணியார்கள் மாத்திரமன்று பராமரிப்பு வேலை, விவசாயம், மீன்பிடி, வீட்டுத்தோட்டம், போன்ற கடினமான தொழில்களில் ஈடுபடுபவர்களும் காணப்படுவது குறிப்பிடதக்க விட யம். இதனுடன் இன்று மலையகத்தில் உருவெடுத் துள்ள நுண்நிதி கடனால் பாதிக்கப்பட்ட பெண்களின் பிரச்னைகள் மற்றும் அது சார்நத சமூக சிக்கல்கள், தற்கொலைகள், வன்முறைகள் என்பன பெரிதாக தலை தூக்கியுள்ள மற்றுமொறு பாரிய பிரச்னையாகும்.

பெண்களுக்கான உரிமை சாசனம் 1840 ஆம் ஆண்ட ளவில் இலண்டனில் நடைபெற்ற அனைத்துலக அடி மைத்தனத்திற்கு எதிரான மாநாடு இடம்பெற்றபோது முதலாவது பெண்கள் உரிமை சாசனம் மும்மொழி யப்பட்டதாக வரலாறு கூறினாலும் மலையக பெருந் தோட்ட துரைசார் மற்றும் ஏனைய துறை சார்ந்த மலை யக பெண்கள் இன்னும் அடிப்படை உரிமை தொடர் பாகவும் அவர்களை இதில் விழிப்புணர்வு அடையச் செய்தலிலும் கவனம் செலுத்தாததோர் துர்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில் சமூக நீரோட்டத்தில் எமது பெண் களின் பங்களிப்பை உறுதி செய்வதற்கான வலுவான நடவடிக்கைகள் அத்தியவசியமானது. இதில் மற்று மொரு பக்கத்தை மறந்துவிட முடியாது அதுதான் ஜனநாயகத்தில் பங்குபற்றவும், பேரம் பேசவும், ஆண் களோடு அதிகார வெளியை பகிர்ந்துகொள்ளவும் எமது பெண்கள் வலுவான நிலையை அடைய வழியமைக்க வேண்டும். அதன் அடிப்படையில் பிரதேச சபைகளி லும், மாகாண சபைகளிலும் பெண்களின் பிரதிநிதித் துவம் எந்தளவு என்பது சொல்லி தெரிந்துகொள்ள தேவையில்லை. மற்றும் பாராளுமன்றத்தில் எமது பெண்களின் பங்குபற்றுதல் பூச்சியமாகவே காணப்படு கின்றது. இதைவிடவும் பெருந்தோட்ட துறையில் 65 விகிதத்திற்கு மேல் பெண் தொழிலாளர்கள் வேலை செய்தாலும் அவர்களது அனைத்து செயற்பாடுகளையும் ஆண்கள் தீர்மாணிக்கும் நிலை மாற்றமடையவில்லை என்பது நிதர்சனமான உண்மையாகும்.

அத்துடன் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி சமூக மட்டத்திலான நிறுவனங்களில் அதாவது கூட்டுறவுச் சங்கம், கிராம அபிவிருத்தி சங்கம், சமய நிறுவனங்கள், மரண உதவிச் சங்கங்கள், இளைஞர் அமைப்புக்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் என்பவற்றில் பெண்களின் உறுப்புரிமை எந்தளவு காணப்படுகின்றது என்பது முதலில் கவணிக்கப்பட வேண்டியதாகும். இவ்விடயங்களுடன் சம்பந்தப்பட்ட வேலைத்திட்டங் களை முன்னெடுக்க வேண்டியதுடன் அங்கு பால்நிலை, பால்நிலை பாகுபாடு, பால்நிலை சமத்துவம் என்பன பற்றிய வேலைத்திட்டங்களை சமயாசமயத்தில் கவணிக்கப்படுவதுடன், திட்டமிடப்பட்டுள்ள சகல வேலைத்திட்டங்களிலும் பால்நிலை சம்பந்தமான விடயம் காணப்படுகின்றதா என்பதை கண்காணித்தல் தற்போதைய நிலையில் அத்தியவசியமாகின்றது. வெறுமனே குடும்ப பொறுப்புக்கள் பெண்களுக்கு மட்டுமே உரித்தானதாகக் கருதப்படும் பாரம்பரியமான ஓர் எதிர்பார்ப்பும் மனப்பதிவும் எவ்விதமான கேள்விகளுக்கும் உட்படுத்தப்படாமல் அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நிலை மாற்றியமைக்கப்பட்டு சமூக ரீதியிலான பங்குபற்றல் என்பது பெண்களுக்கு அத்தியவசியமானது.

இது பெண்களின் இயல்புக்கும், ஆற்றலுக்கும் முக்கியமானது என்பதை புரிந்து செயற்படவேண்டியது கட்டாய தேவையாகவுள்ளது.

“ஏங்கல்ஸ்” குறிப்பிட்டது போல பெண்கள் மீதான அடக்குமுறையானது உண்மையில் வர்க்க சமூகத்தின் விருத்தி நிலையுடன் தொடர்பு பட்டதாகும். எனவே மலையகத்தில் ஒடுக்கப்பட்ட பெண்களின் விடுதலைக் கான குரலாக உழைக்கும் பெண்கள் தினம் அவசிய மானது என்பதே நிகழ்காலத்தின் தேவையாக உள்ளது அதனை வலுப்பெறச் செய்வதற்காக அனைவரும் ஒன்று திரல்வது இத்தினத்திற்கான தேவையாகவும் உள்ளது. ■

# ஜெனிவா முன்னெடுக்கும் ஆதார சேகரிப்பு அலுவலகம் இலங்கைக்கான பொறியா?

**பான் கி மூனையும் நவநீதம்பிள்ளையையும் முன்னர் அழைத்ததுபோல தற்போதைய மனித உரிமைகள் ஆணையாளர் பச்சிலற் அம்மையாரை நேரில் வாருங்கள், உண்மையை அறியுங்கள் என்று இலங்கை அரசு விடுத்த அழைப்பை மறந்துள்ள அதன் பிரதிநிதி அமைச்சர் பீரிஸ், பேரவை முன்னெடுக்கும் ஆதார சேகரிப்பு அலுவலக பொறிமுறையை எதற்காக எதிர்க்கிறார்? இதனைக் கண்டு ஏன் அஞ்சுகிறார்?**



**பனங்காட்டான்**

வெளியிலும் உள்ளேயும் சமகாலத்தில் பிரச்னைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சிக்கலில் கோட்டாபய ஆட்சித்தரப்பு அகப்பட்டுள்ளதை காணமுடிகிறது.

ஜெனிவா முடிச்சை அவிழ்க்க இரண்டு அமைச்சர்களும் இரண்டு உயர் அதிகாரிகளுமாக நால்வர் அங்கு சென்று சர்வதேசத்தை தங்கள் பொய்க்குள் சிக்க வைக்க முயற்சித்துக் கொண்டிருக்க, கொழும்பில் இரண்டு அமைச்சர்கள் பதவி நீக்கப்பட்டு வெறும் பாராளுமன்ற உறுப்பினர்களாக மாற்றப்பட்டுள்ளனர்.

இவை இரண்டுமே எதிர்பார்க்கப்பட்டவைதான். ஆனால், ஒரே வேளையில் இரண்டையும் ஆட்சித்தரப்பு சந்திக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியதுவே விசித்திரமானது. குழப்பங்காலிகள் என்று பெயர்பெற்ற விமல் வீரவன்சவும், உதய கம்மன்பிலவும் அமைச்சர்கள் பதவிகளில் இருந்தவாறே தொடர்ந்து கோட்டாபயவுக்கு குடைச்சல் கொடுத்துக் கொண்டிருந்தவர்கள். அமைச்சர் பதவியிலிருந்து வெளியேறுவார்களா அல்லது வெளியேற்றப்படுவார்களா என்பதே பொதுவான கேள்வியாக இருந்தது. இரட்டைப் பிரஜாவுரிமை பெற்ற பஸில் ராஜபக்க்ஷவை பாராளுமன்ற உறுப்பினராக்கி அமைச்சர் பதவியும் வழங்கியபோதே இவர்களின் போராட்டம் வெளியே தெரியவந்தது. இவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் இன்னொருவரான ராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இதுவரை பதவி நீக்கப்படவில்லை.

அரசாங்கத்தின் பதினொரு பங்காளிக் கட்சிகளும் பல வழிகளிலும் தங்கள் உள்வீட்டுப் போரை வெளியில் அம்பலப்படுத்தி வந்தவர்கள். சில நாட்களுக்கு முன்னர் “முழு நாட்டையும் சரியான பாதைக்கு” என்ற தொனிப் பொருளில் இவர்கள் நடத்திய கூட்டம் அதியுச்ச செயற்பாடாக அமைந்தது.

“நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு அரச தலைவர்களே காரணம். இவர்கள் தான்தோன்றித்தனமாக செயற்படுகின்றனர். கறுப்புப் பணச் சந்தையை நிதி அமைச்சர் (பசில் ராஜபக்ச) செயற்படுத்துகிறார். நாட்டை அழிக்க இவர்களுக்கு இடமளிக்க முடியாது. இறுதியான தீர்மானங்களை முன்னெடுப்போம்” என்று செஞ்சட்டை வீரர் பாணியில் உரையாற்றிய விமல் வீரவன்ச தமது உரையின் இறுதியில் “நாங்கள் இரட்டைப் பிரஜாவுரிமைக்காரர்கள் அல்ல. இங்குதான் வாழ்கிறோம் இங்குதான் இறப்போம்” என்று கூறியது நேரடியாக பசிலை பகிரங்கமாகச் சாடுவதாக அமைந்தது.

இதன் பின்னர் இறுதி முடிவை இவர்களை எடுக்க விடாது கோட்டாபய தாமே எடுத்துக் கொண்டார். வியாழக்கிழமை விசயம் கசிந்துவிட்டது. அடுத்த சில மணி நேரங்களில் அவர்களின் அமைச்சர் பதவி பறிக்கப்பட்டது எழுத்து மூலம் அனுப்பப்பட்டது.

வாசுதேவ நாணயக்கார தாமாக வெளியேறுவதற்கு அரசாங்கக் கதவு திறந்து வைக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும் கோட்டாபய நாட்களை எண்ணுவதாக செய்திகள் கூறுகின்றன. சுதந்திரக் கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேனவை குறிவைத்து ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடவடிக்கைகள் இடம்பெறுவதும் தெரிய வருகிறது.

எந்த நேரத்திலும் அரசிலிருந்து வெளியேற தாங்கள் முடிவெடுத்து விட்டோமென்று மேடைகளில் முழங்கி வரும் சுநத்திரக் கட்சியினரை, அதற்கு முன்னரே கழற்றி விடவும் ஆட்சி பீடம் தயாராகியுள்ளது. இவைகள் இவ்வாறே இடம்பெறுமானால் பதவி இழக்கும் அல்லது பதவி பறிக்கப்படும் முக்கியஸ்தர்களின் பழைய கோவைகள் சில தூசு தட்டி எடுக்கப்பட்டு உரிய இடத்துக்கு அவர்களை அனுப்பவும் ராஜபக்ஷக்கள் தயாராகி வருகின்றனர்.

இந்த அதிரடி நடவடிக்கைகள் ஆட்சித்தரப்பின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை குறைக் காமலிருக்க, எதிரணிகளிலுள்ள சிலர் புதிய பதவிகளுடன் தங்களுடன் சேர காத்திருக்கின்றனர் என ராஜபக்ஷ குடும்பத்தின் இளவல் ஒன்று தமது நண்பர்களிடம் கூறியதும் சமூக ஊடகங்களில் கசிந்துள்ளது.

இனி வரவுள்ள வாரங்களும், மாதங்களும் ஆட்சித்தரப்பினரின் நகர்வுகள் அதற்கான எதிர் நகர்வுகள் என பல நெருக்கடிகளை இப்போதுள்ளதற்கும் மேலாக நாடு சந்திக்கவிருப்பது தெரிகிறது. உள்நாட்டு நிலைவரம் இவ்வாறிருக்கையில், ஜெனிவா விவகாரம் எதிர்பார்க்கப்பட்ட வழித்தடத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறது. சிங்கள அரசாங்கங்கள் எதுவாக இருந்தாலும் அவற்றின் காப்ப ராக எப்போதும் செயற்படும் அமைச் சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் அரசாங் கத்தின் நால்வர் அணி ஜெனிவாவில் முகாமிட்டுள்ளது. கூட்டத்தொடர் 28ஆம் திகதி ஆரம்பமாவதற்கு முன்னரே போர்க்குற்றத்தையும் மனித உரிமைகள் மீறலையும் போர்த்து மூடும் புரட்டுக் கருத்துகளை பீரிஸ் வெளியிட ஆரம்பித்தார்.

மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்சிலற் அம்மையாரின் பதினேழு பக்க இலங்கை தொடர்பான அறிக்கைக்கு ஏற்கனவே எழுத்து மூலம் பதிலளித்த இலங்கை அரசின் பிரதிநிதி என்ற வகையில், எழுத்தில் சொல்லப்பட்டவைகளுக்கு மேலும் நம்பகத்தன்மை ஊட்டும்



வியாக்கியானம் கொடுத்து சர்வதேசத்தை தம் பக்கம் இழுக்க வேண்டியது அமைச்சர் பீரிஸின் கடமையும் பொறுப்பும்.

ஏற்கனவே வரையப்பட்டு பின்னர் மேலும் சீரமைக்கப்பட்ட தமது அறிக்கையை பச்சிலற் அம்மையார் மூன்றாம் திகதி வியாழக்கிழமை பேரவையில் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் அமைச்சர் பீரிஸ் பதிலுரையாற்ற வேண்டும். ஆனால், உக்ரைன் மீது ரஷ்யா நடத்தும் ஆக்கிர மிப்பு அழிப்புத் தாக்குதல் பற்றி மூன்றாம் திகதி பேரவை யில் ஆராய வேண்டியிருந்ததால், இலங்கை விவகாரம் ஒரு நாளுக்கு பின்போடப்பட்டது.

கடந்த வருடம் மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட 46:1 தீர்மானத்தின் பிரகாரம் கடந்த செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற 48ஆவது அமர்வும், தற்போதைய 49ஆவது அமர்வும், இவ்வருட செப்டம்பரில் நடைபெறவுள்ள 51ஆவது அமர்வும் மூன்று கட்டங்களாக படிமுறையில் பகிரப்பட்டவை. அதன் பிரகாரம் தற்போதைய அமர்வில் 46:1 தீர்மானத்தில் கூறப்பட்ட இலங்கை தொடர்பான ஆதாரங்களைச் சேகரிப்பதற்கான பொறிமுறை வெளிவந்துள்ளது.

அதாவது இலங்கையின் பொறுப்புக்கூறல், சர்வதேச நீதி விசாரணை போன்றவற்றுக்கான ஆதாரங்களைச் சேகரிப்பதற்கு இலங்கையில் அலுவலகம் ஒன்றை அமைப்பதை ஆணையாளர் அறிக்கை தெரிவித்துள்ளது. இதனை இலங்கைப் பிரதிநிதி பீரிஸ் கடுமையாக எதிர்த்துள்ளார்.

இலங்கையின் அனுமதியின்றியே 46:1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்ற தமது அரசின் ஆதங்கத்தைச் சுட்டிய இவர், ஆதாரங்களைச் சேகரிக்கும் பொறிமுறையால் பாதகமான நிலைவரங் களே ஏற்படுமென்று ஒருவகை மென்போக் கில் - ஆனால் எச்சரிக்கைப் பாணியில் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் பேரவை முன்மொழிந்துள்ள பொறிமுறையால் நல்லிணக்க முயற்சிகளுக்கு தடையேற்படும் என்றும் இவர் குறிப்பிட்டுள்ளதானது ஏற்கனவே இலங்கை அரசு இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வருவதாக நம்ப வைக்கும் பாணியில் அமைந்தது. அதுமட்டுமன்றி இனங்களுக்கிடையிலிருக்கும் கடந்த கால கசப்புணர்வு புதிய பொறிமுறையால் மீண்டும் கிளறப்படுமெனவும், இதனால் சமூகங்கள் பிளவுபட்டு வெறுப்புகள் வளர்க்கப்படுமெனவும் இலங்கை அரசை பாதுகாக்கும் ஆலோசனைப் பாணியிலும் பீரிஸ் கருத்து வெளியிட்டுள்ளார்.

மைத்திரிபால - ரணில் ஆட்சிக்காலத்தில் அமெரிக்கா முன்மொழிந்த இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு அரசாங்கம் இணைஅனுசரணை வழங்கியது. அந்த ஆட்சியின் நாலரை ஆண்டுகளும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவோடு கால அவகாசம் பெறப்பட்டதே தவிர எதுவும் இடம்பெறவில்லை. கோட்டாபய ஜனாதிபதியாக வந்ததும் தமது தேர்தல் பரப்புரையில் குறிப்பிட்டது போல இந்தத் தீர்மானத்தை ஒருதலைப்பட்சமாக விலத்திக் கொண் டார். இதன் காரணமாகவே 46:1 தீர்மானம் நிறைவேற் றப்பட்ட சூழ்நிலை உருவானது என்பதை அமைச்சர் பீரிஸ் மறந்து, அந்த வரலாற்றை உண்மைக்குப் புறம் பாக்கும் நடவடிக்கைக்குச் சாதகமான கருத்தை வெளியிட்டுள்ளார்.

இனங்களுக்கிடையிலான காயங்களை மூடவேண்டுமென்றும் அதற்கு பொறுப்புக்கூறல் பொறிமுறை தடையாக இருக்குமெனவும் இவர் கூறுவது கூட அபத்தமானது. திரிகரண சுத்தியான பொறுப்புக்கூறல் இன்றி காயங்களை மூட முடியாது, ஆற்றவும் முடியாது. இதனைச் செய்வதற்கு மறுக்கும் அரசின் பிரதிநிதியான பீரிஸ் மனித உரிமை மீறல் தொடர்பான ஆதார சேகரிப்புப் பொறிமுறைகூட இனங்களுக்கிடையில் விரிசலையும் பிளவையும் அதகரிக்குமென கூறுவதுகூட ஏற்க முடியாதது.

2009 மே 18 இல் முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் உறைநிலைக்குச் சென்றதையடுத்து அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் அதே மே மாத இறுதியில் களவிஜயம் மேற்கொண்ட ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி மூனும், 2013இல் அதே மகிந்தவின் அழைப்பின் பேரில் அங்கு அனைத்தையும் நேரில் சென்று பார்த்த அப்போதைய மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் முன்னெடுத்த முயற்சிகளாலேயே பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற ஆரம்பித்தன. பான் கி மூனும் மகிந்த ராஜபக்ஷவும் விடுத்த கூட் டறிக்கையில் பொறுப்புக்கூறலே முக்கியமான கருப் பொருள். நிச்சயமாக இந்த அறிக்கை தற்போது வெளிவிவகார அமைச்சராகவிருக்கும் ஜி.எல். பீரிஸின் அலுவலகத்தில் இருக்கும். இதனையே தெரியாதவர் போன்று ஜெனிவா தீர்மானங்களை தூக்கியெறிந்து பேசுவது அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலின்மையை வெளிப்படுத்துகிறது. அண்மையில் - மிக அண்மையில், தற்போதைய மனித உரிமைகள் ஆணையாளர் பச்சிலற் அம்மையாரைக்கூட “இலங்கைக்கு வாருங்கள், வந்து உண்மை நிலைமையை நேரில் பாருங்கள்” என்று இலங்கை அரசு விடுத்த அழைப்பைக்கூடவா பீரிஸ் மறந்துவிட்டார். தமது சார்பில் ஒரு அலுவலகத்தை அங்கு அமைத்து போர்க்கால ஆதாரங்களைச் சேகரிக்கும் பொறிமுறையை ஆணையாளருக்கு உறுப்பு நாடுகள் அனுமதி வழங்கியுள்ளன. அதனை பகிரங்கமாக நேர்த்தியாக மேற்கொள்ள அவர் விரும்புகிறார்.

இறுதியாக, அமைச்சர் பீரிஸிடம் ஒரு கேள்வி: இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லையெனில், மனித உரிமைகள் மீறப்படவில்லையெனில், மனிதகுலத்துக்கு எதிரான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லையெனில், எவரும் காணாமலாக்கப்படவில்லையெனில், இவை பற்றி ஆராயவும் ஆதாரங்கள் சேகரிக்கவும் மனித உரிமைகள் பேரவை நடவடிக்கை எடுப்பதை எதற்காக மறுக்க வேண்டும்? எதற்காக இதனைக் கண்டு அச்சப்பட வேண்டும்?


# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

22. பி.ப. 1.20 என்பது இருபத்து நான்கு மணிக் கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக.

: ..........................................

23. எதிரே தரப்பட்டுள்ள உருவில் $\frac{1}{4}$ ஐ (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந்திட்டுக.



24. 36 தோடம்பழங்களில் $\frac{1}{4}$ ஐ விற்ற பின்னர் எஞ்சியிருக்கும் தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது?

: ..........................................

25 
உருவில் உள்ள உருளையில் இருக்கும்,
(i) முகங்களின் எண்ணிக்கை யாது? : ....................
(ii) வளைந்த, விளிம்புகளின் எண்ணிக்கை யாது? : ....................

26. கீழே உருவில் காட்டப்பட்டுள்ள பென்சிலின் நீளம் எவ்வளவு?




: .................... cm

27. அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்ளைக் கொண்டு விடையளிக்குக.

| பாடசாலை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| A | 245 |
| B | 740 |
| C | 390 |

(i) A பாடசாலை, C பாடசாலை ஆகிய இரண்டிலும் உள்ள மொத்த மாணவர் தொகை எவ்வளவு?

: ..........................................


(ii) பாடசாலை B இல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையானது A, C ஆகிய பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கையை விட எவ்வளவு கூடுதலானது?

: ..........................................

28. 621 தேங்காய்கள் சம எண்ணிக்கையுள்ள மூன்று குவியல்களாகப் பங்கிடப்பட்டன. ஒரு குவியலில் உள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

: ..........................................

29. ஒரு குறித்த மாணவர் குழுவிடம் அவர்கள் விரும்பும் உணவு வகை பற்றிப் பெறப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.




(i) மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் விரும்பும் உணவு வகை யாது?

: ..........................................

(ii) மாணவர்கள் சமமான எண்ணிக்கையில் விரும்பும் இரு உணவு வகைகளும் யாவை?

: ..........................................

(iii) குறித்த குழுவில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: ..........................................

## விடைகள்

21. (i) 129
(ii) 80

22. 13:20

23. (பொருத்தமாக நிழற்றியிருப்பின் புள்ளி வழங்குக.)

24. 27

25. (i) 2 / இரண்டு
(ii) 2 / இரண்டு

26. 6

27. (i) 635
(ii) 105

28. 207

29. (i) தோசை
(ii) கடலை, இடியப்பம்
(iii) 45

## கல்வி tv CHANNEL-1

**08.03.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**08.03.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# தமிழினத்துக்காக நாம் ஒன்றிணைய வேண்டும்

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி. கோரிக்கை

மட்டக்களப்பு, மார்ச் 08

**நாங்கள் நீ பெரிது நான் பெரிது என்று பார்க்காமல் இன்று இந்த ஐந்து கட்சிகள் ஒன்றாக இணைந்து ஐ.நா. ஆணையாளருக்குக் கடிதம் எழுதியதைப் போன்று பாதிக்கப்பட்டு உரிமை இழந்து நிற்கும் எமது தமிழினத்திற்காக நாங்கள் ஒன்றாகச் செயற்பட வேண்டும் என்பதை மிகவும் வலிந்து கேட்டுக் கொள்கின்றேன் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

கடந்த வடம் 46/1 தீர்மானம் கடந்த வரும் மார்ச் மாதத்தில் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டது. அந்த அடிப்படையில் இலங்கையில் பொறுப்புக் கூறல் என்பது பின்னடைவைச் சந்தித்துள்ளதாக ஐ.நா மனித உரிமைகள் சபை ஆணையாளர் மிச்செல் பச்சலெட் கூறியிருக்கின்றார்.

ஒவ்வொரு முறையும் ஐ.நா கூட்டத்தொடர் நடைபெறும் போதும் பாதிக்கப்பட்ட எமது தரப்பில் இருந்து பிரதிநிதிகள் நேரடியாகச் சென்று அந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்பதும், நேடியாகப் பங்குபற்றமால் இங்கிருந்து இங்கு நடைபெறும் அநியாயங்களை மனித உரிமை மீறல்களை கடிதம் மூலமாக அனுப்பி வைப்பதாகவும் நிகழ்வுகள் நடைபெறும்.

அந்த வகையில் இவ்வருடமும் ஐ.நா கூட்டத்தொடரை முன்நிறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயா ஒரு கடிதம் அனுப்பியுள்ளார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு கடிதம் அனுப்பியிருக்கின்றது.

அதேபோன்று விபரமாக இங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்கள், காணி அபகரிப்புகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினூடாக நடைபெறும் கைதுகள் தொடர்ந்தும் அரசியற் கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது போன்ற பல



விடயங்களை உள்ளடக்கி தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கும் தமிழீழ விடுதலை இயக்கம், ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசியக் கட்சி போன்ற ஐந்து கட்சிகளும் இணைந்து விவரமான அறிக்கையை அனுப்பியிருந்தோம்.

அந்த கடிதத்தின் அடிப்படையில் ஐ.நா அதிகாரிகள் மெய்நிகர் மூலமாக இந்த ஐந்து கடசிகளின் தலைவர்களுடனும் உரையாடியிருந்தார்கள். இதன்போது உரையாடப்பட்டதும், ஐந்து கட்சிகளினால் அனுப்பப்பட்ட கடிதத்திலுள்ளதுமான பல விடயங்கள் ஆணையாளரினால் 48 அங்கத்துவ நாடுகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ள 13 பக்க அறிக்கையிலே உள்ளடக்கப்பட்டிருப்பது எங்களுக்கு உண்மையிலே மகிழ்ச்சியைத் தருகின்றது.

அந்த அறிக்கையின் நிமித்தம் இலங்கையில் பொறுப்புக் கூறல் என்பது முறையாக நடைபெறவில்லை, சகலராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசமைப்பின் ஊடாக நிரந்தர அரசியற் தீர்வைக் காண்பதற்குரிய முக்கியத்துவம் போன்றன வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

அதற்கும் மேலாக அண்மையில் இடம்பெற்ற மெய்நிகர் கலந்துரையாடலில் இந்தியா சார்பில் கலந்துகொண்ட ஐ.நா அதிகாரி, 13ஆவது திருத்தம் உள்ளடங்கலாக இலங்கையிலே தமிழர்கள் சமத்துவமாக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஒரு வாழ்க்கையை வாழ்வதற்கான அதிகாப்பரவலாக்களுடன் கூடிய ஒரு அரசியற் தீர்வு கொண்டு வரப்பட்டு மிக விரைவில் ஒரு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறியிருக்கின்றார்.

இவைகளையெல்லாம் பார்க்கும் போது எமக்கான ஒரு தீர்வு மிக விரைவில் வரும் என்பதில் ஒரு அளவுக்கு நிம் மதியடையும் நம்பிக்கை வந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயங்கு நிலையில் இருந்த காலத்தில் ஒற்றுமையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காக அரசியல் ரீதியாகப் போராடிய கட்சிகள் 2009 இற்குப் பிற்பாடு பிளவுபட்டுள்ளன.

இந்தக் கட்சிகள் பிளவுபடுவதற்கான காரணங்களும் எமக்குத் தெரியாமலில்லை. இந்த விடயத்திலே நாங்கள் நீ பெரிது நான் பெரிது என்று பார்க்காமல் இன்று இந்த ஐந்து கட்சிகள் ஒன்றாக இணைந்து ஐ.நா ஆணையாளருக்குக் கடிதம் எழுதியதைப் போன்று ஏனைய அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவோமாக இருந்தால் இன்னும் விரைவாக கூடுதலான பெறுபேறுகளை நாங்கள் பெற்றுக் கொள்ள முடியும். அந்த வகையிலே பாதிக்கப்பட்டு உரிமை இழந்து நிற்கும் எமது தமிழினத்திற்காக நாங் கள் ஒன்றாகச் செயற்பட வேண் டும்-என்றார். (அ)



# கைதிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

திருமலை, மார்ச் 08

திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் 75 பிள்ளைகளுக்கு பாதணி மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. திருகோணமலை சிறைச்சாலையும், திருகோணமலை சிறைச்சாலை சிறைக் கைதிகள் நலன்புரிச் சங்கமும் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த நிகழ்வு சிறைச்சாலை அத்தியட்சகர் வசந்த குமார டேப் தலைமையில் திருகோணமலை நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் சிறை கைதிகள் மற்றும் விளக்கமறியல் கைதிகளின் பிள்ளைகளுக்கே கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (அ)

# பதவி உயர்வு பெற்றுள்ள செயலாளருக்கு பாராட்டு



மட்டக்களப்பு, மார்ச் 08

உதவிப் பிரதேச செயலாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் ஏறாவூர் நகர சபைச் செயலாளர் எம்.ஆர். ஷியாஹுல் ஹக்கிற்கு கௌரவமும் பாராட்டும் அளித்து வழியனுப்பும் வைபவம், ஏறாவூர் வாவிக்கரையோ கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஏறாவூர் நகர சபைத் தலைவர் எம்.எஸ். நழிம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஏறாவூர் பொலிஸ் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.கே.ஏ. ஜவாகீர், ஏறாவூர் நகர சபையின் புதிய செயலாளர் எச்.எம்.எம். ஹமீம் உட்பட ஏறாவூர் நகர சபை உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் பதவி உயர்வு பெற்று இடமாற்றலாகிச் செல்லும் செயலாளரின் சேவைகளையும் அவரது திறமைகளையும் அதிதிகள் பாராட்டிப் பேசினர்.

இதன்போது இலங்கை நிர்வாக சேவை அதிகாரியான ஏறாவூர் நகர சபைச் செயலாளர் எம்.ஆர். ஷியாஹுல் ஹக் வாழ்த்தி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதோடு, அவருக்கு நினைவுப் படிகங்களும் அதிதிகளால் வழங்கப்பட்டன. (அ)




# தேசிய சேமிப்பு வங்கியின் மகளிர் தினம் திருமலையில்

திருமலை, மார்ச் 08

மகளிர் தினத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கி திருகோணமலை கிளையின் ஏற்பாட்டில் விசேட நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

திருகோணமலை கண்டி வீதியில் அமைந்துள்ள சிலிங்கோ நிறுவன கேட்போர்கூடத்தில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

தேசிய சேமிப்பு வங்கி திருகோணமலை கிளை உதவி முகாமையாளர் திருமதி நிரோஷினி ரமேஷ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் திருகோண மலை பொது வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி மருத்துவர் கிரியெல்ல, மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சுவர்ணா தீபாணி, திருகோணமலை பொலிஸ் தலைமையக பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவுப் பொறுப்பதிகாரி எஸ்.ஜி.குணவர்த்தன, வங்கியின் கிழக்கு பிராந்திய முகாமையாளர் சி.சிவசொருபன், கந்தளாய் கிளை முகாமையாளர் எஸ்.சிவகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். வங்கி வாடிக்கையாளர்களின் அனுபவம் பகிரப்பட்டதுடன் அரங்க ஆற்றுகையும் நிகழ்த்தப்பட்டது. ஷெரின் சித்திரா என்ற வாடிக்கையாளருக்கு ரூ. 3 மில்லியன் தனிநபர் கடனுக்கான காசோலை வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட பெண் வாடிக்கையாளர்களுக்கு நினைவு பரிசுகளும் வழங்கப்பட்டன. (அ)

# வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்!

மட்டக்களப்பு, மார்ச் 08

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாற்றுத்திறனாளிகளில் குடும்பங்களைச் சேர்ந்த வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஜேர்மனி ஸ்டுட்காட் உறவுகளுக்கு கரம் கொடுப்போம் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் எம்.சியான், பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எம். தாசிம், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 50 மாற்றுத்திறனாளிகளில் குடும்பங்களைச் சேர்ந்த வறிய மாணவர்களுக்கு ஜேர்மனி ஸ்டுட்காட் உறவுகளுக்கு கரம் கொடுப்போம் அமைப்பின் ஊடாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (அ)

# கீவ் மீது முழுவீச்சில் தாக்குதல் தயாராகி வருகின்றது ரஷ்யா!

## உக்ரைன் அரசு தகவல்!



கொழும்பு, மார்ச் 08

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடங்கி 12ஆவது நாளாகவும் தாக்குதல் நீடித்து வருகின்ற நிலையில், தலைநகர் கீவ் மீது முழு வீச்சில் தாக்குதல் நடத்த தயாராகி வருவதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

ரஷ்யப் படைகள் கீவ் நகரத்தின் மீதான தாக்குதலுக்கான பொருட்களை சேகரிக்கத் தொடங்கியுள்ளதாகவும், டாங்கிகள் மற்றும் மோட்டார் பொருத்தப்பட்ட படைப் பிரிவுகள் மூலம் கீவ் நகரின் இர்பின் பகுதியை நோக்கி முன்னேறி வருவதாகவும் உக்ரைன் ராணுவத் தளபதி கூறியுள்ளார்.

ரஷ்ய ராணுவ தளபதிகள் எரிபொருளை கப்பல் மூலம் தங்கள் படைகளுக்கு, பெலாரஸிலிருந்து செர்னோபிள் விலக்கு மண்டலம் வழியாக அனுப்பி வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

கிழக்கு நகரங்களான கார்ஹிவ், செர்னிஹிவ், சுமி மற்றும் தெற்கு நகரமான மைகோலாயிவ் ஆகிய பகுதிகளை ரஷ்ய ராணுவம் சுற்றி வளைப்பதில் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கெர்சன் உள்ளிட்ட சில நகரங்களை ரஷ்ய படைகள் கைப்பற்றியுள்ள நிலையில், ரஷ்ய படையினரால், கீவ், கார்கிவ் நகரங்களைக் கைப்பற்ற ஏவுகணை வீச்சு, வான் வெளி தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

மத்திய, வடக்கு, தெற்கில் இருக்கும் நகரங்களில் இரவு நேரத்திலும் ரஷ்ய படைகள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றது. மேலும், 2 அணுமின் நிலையங்களும் ரஷ்யா வசம் சென்றுள்ளது.

தலைநகர் கீவ்வில் இருந்து சுமார் 25 கிலோமீற்றர் தொலைவில் ரஷ்ய படைகள் இருப்பதாக செயற்கை கோள் புகைப்படம் மூலம் தெரிய வந்துள்ளது.

உக்ரைன் இராணுவம் தாக்குதலை நிறுத்திவிட்டு ஆயுதங்களை கீழே போடும் வரை தாக்குதலை நிறுத்தப்போவதில்லை என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் தெரிவித்துள்ளார்.

மேலும், உக்ரைனின் மத்திய-மேற்கு பிராந்திய தலைநகரான வின்னிட்சியாவின் விமான நிலையத்தை ரஷ்யா, ஏவுகணை தாக்குதல் மூலம் முற்றிலுமாக அழித்துவிட்டதாக உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். (அ)



# ரஷ்யாவிலிருந்து எரிபொருள் இறக்குமதிக்கு தடை வரலாம்?

## ஆராய்கிறது அமெரிக்கா

நியூயோர்க், மார்ச் 08

ரஷ்யாவிலிருந்து எரிபொருள் இறக்குமதியை தடை செய்வது குறித்து அமெரிக்க பிரதிநிதிகள் சபை ஆராய்ந்து வருவதாக பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சட்டத்தை சபையில் கொண்டு நிறைவேற்ற ஆலோசித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், ரஷ்யாவின் அத்துமீறலை எதிர்கொள்ளும் வகையில் உக்ரைனுக்கு 10 பில்லியன் டொலர் நிதி உதவிப் பொதியை அனுமதிப்பதற்கான தீர்மானத்தை காங்கிரஸ் நிறைவேற்ற விரும்புகிறது என்றும் நான்சி பெலோசி கூறினார்.

சர்வதேச பொருளாதாரத்திலிருந்து ரஷ்யாவை மேலும் தனிமைப்படுத்தும் வலுவான சட்டத்தை கொண்டுவருவது குறித்து பிரதிநிதிகள் சபை தற்போது ஆராய்ந்து வருகிறது.

இந்தச் சட்டம் அமெரிக்காவிற்குள் ரஷ்ய எரிசக்தி வளங்களை இறக்குமதி செய்வதை தடை செய்யும். ரஷ்யா மற்றும் பெலாரஸ் உடனான வழக்கமான வர்த்தக உறவுகளை இரத்து செய்வதன் மூலம் உலக வர்த்தக அமைப்பிற்கான ரஷ்யாவின் அணுகலை முறியடிக்க எதிர்பார்த்துள்ளோம் எனவும் நான்சி பெலோசி தெரிவித்தார். (அ)

# உக்ரைனிலிருந்து தப்பி வரும் அகதிகளை பிரிட்டனுக்குள் அனுமதிக்க புதிய திட்டம்?

லண்டன், மார்ச் 08

உக்ரைனில் மோதலில் இருந்து தப்பி வரும் அகதிகளை பிரித்தானியாவுக்கு வர அனுமதிக்க புதிய திட்டத்தை அமைக்க விரும்புவதாக பிரிட்டன் உட்துறை அமைச்சர் பிரிதி படேல் தெரிவித்துள்ளார்.



தி சன் செய்தித்தாளுக்கு வழங்கிய செவ்வியில், 'நான் இப்போது ஒரு மனிதாபிமான பாதையை உருவாக்குவதற்கான சட்ட விருப்பங்களை ஆராய்ந்து வருகிறேன். இதன் பொருள், உக்ரைனில் உள்ள மோதலில் இருந்து வெளியேறும் பிரித்தானியாவுடன் தொடர்பு இல்லாத எவருக்கும் இந்த நாட்டுக்கு வர உரிமை உண்டு' என கூறினார்.

பிரிட்டன் ஏற்கனவே நாட்டில் குடும்பம் அல்லது விருப்பமுள்ள ஆதரவாளர்களுக்கு விஸா திட்டங்களை அறிவித்துள்ளது. ஆனால் அரசாங்கம் அதன் ஐரோப்பிய அண்டை நாடுகளுடன் ஒப்பிடுகையில் போதுமான உதவி செய்யவில்லை என்று எதிர்க்கட்சி சட்டமியற்றுபவர்களால் விமர்சிக்கப்பட்டது. இந்த நிலையில், கடந்த வாரம் போலந்து எல்லைக்கு சென்ற தனது சொந்த அனுபவத்தை மேற்கோள்காட்டி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். (அ)



# போரை நிறுத்தக் கோரி ரஷ்யாவில் ஆர்ப்பாட்டம்!

## ஆயிரக்கணக்கானோர் கைது

மொஸ்கோ, மார்ச் 08

உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போரை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்தி ரஷ்யாவின் பல்வேறு நகரங்களில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆயிரக்கணக்கானோர் திரண்டு போராட்டங்களில் ஈடுபட்டனர். தலைநகர் மொஸ்கோ உட்பட ரஷ்யாவின் 56 நகரங்களில் நேற்று போராட்டங்கள் நடைபெற்றன.

இந்நிலையில் போராட்டத்தை பொலிஸார் மற்றும் ரஷ்ய பாதுகாப்புப் படையினர் தடுத்து நிறுத்தினர். போராட்டத்தில் ஈடுபட்ட 4,300 பேரை பொலிஸார் கைது செய்தனர். கொஸ்கோவில் மட்டும் 1,700 பேர் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைதான அனைவரும் நேற்று முன்தினம் மாலை விடுதலை செய்யப்பட்டனர்.

நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் நவால்னியை விடுவிக்கக் கோரி கடந்த ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற பாரிய போராட்டத்தின் பின்னர் ரஷ்யாவில் நடைபெற்ற பெரும் போராட்டமாக இது அமைந்திருந்தது. இதனிடையே, உக்ரைனின் ஒரு சில நகர்களில் போரை தற்காலிகமாக நிறுத்துவதாக ரஷ்ய அரசு நேற்று தெரிவித்துள்ளது.

உக்ரைன் தலைநகர் கீவ், கார்கிவ், சுமி, மரியபோல் ஆகிய நகரங்களில் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மனிதாபிமான உதவிகள் வழங்குதல் அடிப்படையிலும் பொதுமக்கள் பத்திரமாக வெளியேறவும் இந்த தற்காலிகப் போர் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போர் நேற்று 12ஆவது நாளாக தொடர்ந்தது. உக்ரைனின் பல்வேறு நகரங்களை கைப்பற்றிய ரஷ்ய படைகள், தலைநகர் கீவை கைப்பற்றுவதில் மும்முரம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரஷ்ய அரச தொலைக்காட்சி வலையமைப்புகளில் அநாமதேய குழு ஊடுருவி இணையவழி தாக்குதல்!

மொஸ்கோ, மார்ச் 08

ரஷ்ய அரசு தொலைக்காட்சி வலையமைப்புகளில் அனானிமஸ் ஹக்கிங் குழுவொன்று ஊடுருவி இணைய வழித் தாக்குதல் நடத்தியுள்ளது.

அரச தொலைக்காட்சி வலையமைப்புக்களுக்குள் ஊடுருவி உக்ரைனில் நடக்கும் போரின் காட்சிகளைக் காண்பித்ததாக அனானிமஸ் என்ற ஹக்கிங் குழு கூறியுள் ளது.



அவர்களுடைய ஒரு ருவிட்டர் பதிவில், ரஷ்ய தொலைக்காட்சி சேவைகளான விங்க் ஐ.வி.ஐ மற்றும் ரஷ்யா 24 , சனல் வன் மற்றும் மொஸ்கோ 24 உள்ளிட்ட தொலைக்காட்சி சனல்களை ஹாக் செய்ததாக அனானிமஸ் ஹக்கிங் குழு கூறியுள்ளது.

அனானிமஸ் குழு இது வரை கண்டிராத மிகப்பெரிய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அந்தக் குழு வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த அநாமதேய இணைய வழி ஊடுருவல் குழு ஏற்கனவே ரஷ்ய அரசின் பல்வேறு இணை யத்தளங்களை முடக்கியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# ஐ. பி. எல். இருபது-20 போட்டி அட்டவணை

சென்னை, மார்ச் 08

இந்த ஆண்டுக்கான 15ஆவது ஐ.பி.எல் கிரிகெட் தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி தொடங்கவுள்ள நிலையில், அதற்கான போட்டி அட்டவணையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை நேற்று வெளியிட்டுள்ளது.

65 நாட்கள் நடைபெறும் இந்த தொடரில் மொத்தம் 70 லீக் போட்டிகளுடன், 4 பிளே ஒவ் போட்டிகளும் நடைபெறுகின்றன. அந்த வகையில் முதல் லீக் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகள் மோதுவுள்ளன.



இந்தப் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறவுள்ளது. அத்தோடு கடைசி லீக் போட்டியும், மே மாதம் 22 ஆம் திகதி வான்கடே மைதானத்தில் நடக்கிறது. இதில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத், பஞ்சாப் கிங்ஸ் அணிகள் விளையாடுகின்றன.

இரண்டு போட்டிகள் நடைபெறும் நாட்களில் முதல் போட்டி பிற்பகல் 3.30 மணிக்கும், இரண்டாவது போட்டி இரவு 7.30 மணிக்கும் தொடங்கவுள்ளன.

லீக் ஆட்டங்களுக்கான அட்டவணை மாத்திரம் நேற்று வெளியிடப்பட்டநிலையில், பிளே ஒவ் போட்டிகள் மற்றும் மே 29 ஆம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டியில் மோதும் அணிகள் மற்றும் மைதானங்கள் பின்னர் அறிவிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது.

# இலங்கைக்கு எதிரான டெஸ்ட் இந்திய அணியில் மாற்றம்!

புதுடில்லி, மார்ச் 08

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் இந்திய அணியிலிருந்து குல்தீப் யாதவ் விடுவிக்கப்பட்டு, அக்ஷர் படேல் சேர்க்கப்பட்டுள்ளார்.

மொஹலியில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்டை இந்திய அணி வெற்றி கொண்டது. இதனால் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இந்திய அணி 1-0 என முன்னிலை பெற்றுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 12ஆம் திதகி முதல் பெங்களூரில் நடைபெறவுள்ள இரண்டாவது டெஸ்டுக்கான இந்திய அணியில் அக்ஷர் படேல் சேர்க்கப்பட்டுள்ளார். அணியில் ஏற்கனவே இடம்பிடித்திருந்த குல்தீப் யாதவ் விடுவிக்கப்பட்டுள்ளார். காயம் மற்றும் கொரோனா காரணமாக இந் திய அணியில் சமீபகாலமாக அக்ஷர் படேல் இடம்பெற வில்லை.

மொஹலி டெஸ்டில் மூன்றாவது சுழல் பந்து வீச்சாளராக



விளையாடிய யாதவ், ஒரு விக்கெட்டும் எடுக்காததால், பெங்களூார் டெஸ்டில் அக்ஷர் பட்டேல் இடம்பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது. இது வரை விளையாடிய 5 டெஸ்டுகளில் 36 விக்கெட்டுகள் எடுத்துள்ளார்.

# ஆட்டத்தை இடைநிறுத்துமாறு நானே தகவல் அனுப்பினேன்!

புதுடில்லி, மார்ச் 08

இந்திய அணி முதல் இனிங்ஸில் ஆட்டத்தை இடைநிறுத்தியது தொடர்பாக ஜடேஜா விளக்கம் அளித்துள்ளார்.

மொஹலியில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்டை இந்திய அணி வெற்றி பெற்றது. இதில், முதல் இனிங்ஸில், தான் இரட்டைச் சதம் அடிக்கும் முன்பு இடைநிறுத்தியது பற்றி ஜடேஜா கூறியதாவது:

ஆடுகளத்தில் பவுன்ஸ் நிலையற்று இருந்தது. பந்துகள் நன்கு சுழல ஆரம்பித்தன. எனவே, ஆடுகளத்தில் நமக்கு சாதகமான சூழல் உள்ளது. இப்போதே இலங்கை அணியை துடுப்பெடுத்தாட சொல்லலாம் எனத் தகவல் அனுப்பினேன். ஏனெனில், இரண்டு நாட்களாக களத் தடுப்பில் ஈடுபட்ட அவர்கள் சோர்வாக

இருந்தார்கள். அதனால் உடனடியாக துடுப்பாட்டத்தில் பெரிய இலக்கை அடிக்க முடியாது - நீண்ட நேரம்

விளையாட முடியாது. எனவே விரைவாக டிக்ளேர் செய்து, எதிரணி துடுப்பாட்ட வீரர்களின் சோர்வைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே எங்களின் திட்டமாக இருந்தது என்றார்.



## அட்டவணை விவரம்

| | அணிகள் | திகதி | நேரம் |
|---|---|---|---|
| 1 | சென்னை - கொல்கத்தா | மார்ச் 26 | 7.30 இரவு |
| 2 | டில்லி - மும்பை | மார்ச் 27 | 3.30 பி.ப. |
| 3 | பஞ்சாப் - பெங்களூர் | மார்ச் 27 | 7.30 இரவு |
| 4 | குஜராத் - லக்னோ | மார்ச் 28 | 7.30 இரவு |
| 5 | ஹைதராபாத் - ராஜஸ்தான் | மார்ச் 29 | 7.30 இரவு |
| 6 | பெங்களூர் - கொல்கத்தா | மார்ச் 30 | 7.30 இரவு |
| 7 | லக்னோ - சென்னை | மார்ச் 31 | 7.30 இரவு |
| 8 | கொல்கத்தா- பஞ்சாப் | ஏப்ரல் 01 | 7.30 இரவு |
| 9 | மும்பை- ராஜஸ்தான் | ஏப்ரல் 02 | 3.30 பி. ப. |
| 10 | குஜராத் - டில்லி | ஏப்ரல் 02 | 7.30 இரவு |
| 11 | சென்னை - பஞ்சாப் | ஏப்ரல் 03 | 7.30 இரவு |
| 12 | ஹைதராபாத் - லக்னோ | ஏப்ரல் 04 | 7.30 இரவு |
| 13 | ராஜஸ்தான் - பெங்களூர் | ஏப்ரல் 05 | 7.30 இரவு |
| 14 | கொல்கத்தா - மும்பை | ஏப்ரல் 06 | 7.30 இரவு |
| 15 | லக்னோ - டில்லி | ஏப்ரல் 07 | 7.30 இரவு |
| 16 | பஞ்சாப் - குஜராத் | ஏப்ரல் 08 | 7.30 இரவு |
| 17 | சென்னை - ஹைதராபாத் | ஏப்ரல் 09 | 3.30 பி.ப. |
| 18 | பெங்களூர் - மும்பை | ஏப்ரல் 09 | 7.30 இரவு |
| 19 | கொல்கத்தா - டில்லி | ஏப்ரல் 10 | 3.30 பி.ப. |
| 20 | ராஜஸ்தான் - லக்னோ | ஏப்ரல் 10 | 7.30 இரவு |
| 21 | ஹைதராபாத் - குஜராத் | ஏப்ரல் 11 | 7.30 இரவு |
| 22 | சென்னை - பெங்களூர் | ஏப்ரல்12 | 7.30 இரவு |
| 23 | மும்பை - பஞ்சாப் | ஏப்ரல் 13 | 7.30 இரவு |
| 24 | ராஜஸ்தான் - குஜராத் | ஏப்ரல் 14 | 7.30 இரவு |
| 25 | ஹைதராபாத் - கொல்கத்தா | ஏப்ரல் 15 | 7.30 இரவு |
| 26 | மும்பை- லக்னோ | ஏப்ரல் 16 | 3.30 பி.ப. |
| 27 | டில்லி - பெங்களூர் | ஏப்ரல் 16 | 7.30 இரவு |
| 28 | பஞ்சாப் - ஹைதராபாத் | ஏப்ரல் 17 | 3.30 பி. ப. |
| 29 | குஜராத் - சென்னை | ஏப்ரல் 17 | 7.30 இரவு |
| 30 | ராஜஸ்தான் - கொல்கத்தா | ஏப்ரல் 18 | 7.30 இரவு |
| 31 | லக்னோ - பெங்களூர் | ஏப்ரல் 19 | 7.30 இரவு |
| 32 | டில்லி - பஞ்சாப் | ஏப்ரல் 20 | 7.30 இரவு |
| 33 | மும்பை - சென்னை | ஏப்ரல் 21 | 7.30 இரவு |
| 34 | டில்லி - ராஜஸ்தான் | ஏப்ரல் 22 | 7.30 இரவு |
| 35 | கொல்கத்தா - குஜராத் | ஏப்ரல் 23 | 3.30 பி. ப. |
| 36 | பெங்களூர் - ஹைதராபாத் | ஏப்ரல் 23 | 7.30 இரவு |
| 37 | லக்னோ - மும்பை | ஏப்ரல் 24 | 7.30 இரவு |
| 38 | பஞ்சாப் - சென்னை | ஏப்ரல் 25 | 7.30 இரவு |
| 39 | பெங்களூர் - ராஜஸ்தான் | ஏப்ரல் 26 | 7.30 இரவு |
| 40 | குஜராத் - ஹைதராபாத் | ஏப்ரல் 27 | 7.30 இரவு |
| 41 | டில்லி - கொல்கத்தா | ஏப்ரல் 28 | 7.30 இரவு |
| 42 | பஞ்சாப் - லக்னோ | ஏப்ரல் 29 | 7.30 இரவு |
| 43 | குஜராத் - பெங்களூர் | ஏப்ரல் 30 | 3.30 பி. ப. |
| 44 | ராஜஸ்தான் - மும்பை | ஏப்ரல்30 | 7.30 இரவு |
| 45 | டில்லி - லக்னோ | மே 01 | 3.30 பி. ப. |
| 46 | ஹைதராபாத் - சென்னை | மே 01 | 7.30 இரவு |
| 47 | கொல்கத்தா - ராஜஸ்தான் | மே 02 | 7.30 இரவு |
| 48 | குஜராத் - பஞ்சாப் | மே 03 | 7.30 இரவு |
| 49 | பெங்களூர் - சென்னை | மே 04 | 7.30 இரவு |
| 50 | டில்லி - ஹைதராபாத் | மே 05 | 7.30 இரவு |
| 51 | குஜராத் - மும்பை | மே 06 | 7.30 இரவு |
| 52 | பஞ்சாப் - ராஜஸ்தான் | மே 07 | 3.30 பி. ப. |
| 53 | லக்னோ - கொல்கத்தா | மே 07 | 7.30 இரவு |
| 54 | ஹைதராபாத் - பெங்களூர் | மே 08 | 3.30 பி. ப. |
| 55 | சென்னை - டில்லி | மே 08 | 7.30 இரவு |
| 56 | மும்பை - கொல்கத்தா | மே 09 | 7.30 இரவு |
| 57 | லக்னோ - குஜராத் | மே 10 | 7.30 இரவு |
| 58 | ராஜஸ்தான் - டில்லி | மே 11 | 7.30 இரவு |
| 59 | சென்னை - மும்பை | மே 12 | 7.30 இரவு |
| 60 | பெங்களூர் - பஞ்சாப் | மே 13 | 7.30 இரவு |
| 61 | கொல்கத்தா- ஹைதராபாத் | மே 14 | 7.30 இரவு |
| 62 | சென்னை - குஜராத் | மே 15 | 3.30 பி. ப. |
| 63 | லக்னோ - ராஜஸ்தான் | மே 15 | 7.30 இரவு |
| 64 | பஞ்சாப் - டில்லி | மே 16 | 7.30 இரவு |
| 65 | மும்பை - ஹைதராபாத் | மே 17 | 7.30 இரவு |
| 66 | கொல்கத்தா - லக்னோ | மே 18 | 7.30 இரவு |
| 67 | பெங்களூர் - குஜராத் | மே 19 | 7.30 இரவு |
| 68 | ராஜஸ்தான் - சென்னை | மே 20 | 7.30 இரவு |
| 69 | மும்பை - டில்லி | மே 21 | 7.30 இரவு |
| 70 | ஹைதராபாத் - பஞ்சாப் | மே 22 | 7.30 இரவு |
| 71 | இறுதிக்கான தகுதி 1 | - | 7.30 இரவு |
| 72 | வெளியேற்றும் சுற்று | - | 7.30 இரவு |
| 73 | இறுதிக்கான தகுதி 2 | - | 7.30 இரவு |
| 74 | இறுதியாட்டம் | மே 29 | 7.30 இரவு |

# 200 மெகாவோட் மின்சாரத்தை அவசரமாக கொள்வனவு செய்க!

## மின்சார சபை கோரிக்கை

கொழும்பு, மார்ச் 08

200 மெகாவோட் மின்சாரத்தை விலைமனு கோராமல் அவசரமாக கொள்வனவு செய்யுமாறு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் இலங்கை மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபையின் தலைவரின் எதிர்ப்புக்கு மத்தியில் பொது முகாமையாளர் இந்த கடிதத்தை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளதாக இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இரண்டு வருட காலத்துக்கு தனியார் டீசல் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து அவசர மின்சாரம் கொள்வனவு செய்ய அனுமதி கோரப்பட்டுள்ளது.

இந்த அவசர கொள்வனவுகளுக்கு உடன்பாடு ஏற்பட்ட பின்னரும் அந்த தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரம் கொள்வனவு செலுத்தி அதன் மூலம் மின்சார சபைக்கு பாரிய நிதி இழப்பை சந்திக்க நேரிடும். நீர் மின் நிலையங்களின் ஊடான உற்பத்தி குறைந்து வருவதால் 7 மணி நேர மின்வெட்டு நீடிக்க நேரிடலாம் என்பதால் தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரம் வாங்குவதை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

அவசர மின்சாரம் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நிராகரிக்கப்பட்டது. ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய, போட்டி விலையில் தேவைகளுக்கு மாத்திரம் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென அமைச்சரவை தீர்மானித்துள்ளது. எவ்வாறாயினும், திட்டமிட்டபடி பாரிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படாமையால் 2024 ஆம் ஆண்டு வரை மின் உற்பத்தியில் தட்டுப்பாடு ஏற்படும் என இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ)


## மரண அறிவித்தல்



### மகேந்திரம் றினால்த்

அராலி தெற்கு காளிகோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரம் றினால்த் 06.03.2022 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் மகேந்திரம் - கிருஸ்ணகுமாரி தம்பதியரின் பாசமிகு மகனும், வாகீசன், கோபிநாத் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வினுஸ்ரெல்லாவின் மைத்துனரும் ஹஸ்வித்தின் பெரியப்பாவும், காலஞ்சென்றவர்களான சின்னையா - பொன்னையா மற்றும் சின்னத்தம்பி - பவளம் ஆகியோரின் பேரனும், ஐயாத்துரை - ரதிதேவி காலஞ்சென்றவரான குணரத்தினம் - வசந்தா, தேவராசா - பத்மாவதி, மோகன் - ஜெயகுமாரி மற்றும் இராசேந்திரம் - விஜயகுமாரிஆகியோரின்பெறாமகனும்,அமரர் இரத்தினம் – சிவமாலை, அமரர் தேவராணி, அமரர் சிறீ, விஜயஸ்ரீதரன் - வதனி, சிவா - தர்சினி, நிசாந்தன் - ராகினி, சுகந்தன் - பவானி, ஜெசிந்தன் - கௌரி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.03.2022 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மினங்குப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**நாகலிங்கம் குடும்பத்தினர்**
**மற்றும் ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம்.**


# அமைச்சரவையிலிருந்து நான் நீதிக்காக குரல் கொடுத்தேன்!

## கூறுகிறார் விமல் வீரவன்ஸ எம்.பி.

கொழும்பு, மார்ச் 08

"நான் அமைச்சரவையிலிருந்து நீதிக்காகவே குரல் கொடுத்தேன். நாட்டின் நலன் கருதி உண்மைகளைப் பகிரங்கமாக உரத்தபடியால் எனது அமைச்சுப் பதவியை ஜனாதிபதி பறித்துள்ளார். எனினும், நீதி வெல்லும் உண்மை ஒருபோதும் சாகாது."

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி. தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை தனது வீட்டில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: -

நான் உள்ளிட்ட எனது கட்சியைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும் பாராளுமன்றத்தில் எதிரணிப் பக்கம் அமரமாட்டோம். அரச பக்கம் இருந்தே சுயாதீனமாகச் செயற்படுவோம். எனக்கு நடந்த அநீதிக்கு நீதி கிடைத்தே தீரும்.

எனது அமைச்சுப் பதவி பறிபோக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவே முழுக்காரணம். அதற்கான விளைவுகளை அரசியல் ரீதியில் அவர் விரைவில் சந்தித்தே தீருவார்.

நாட்டின் பொருளாதாரம் அதளபாதாளத்துக்குள் சென்றமைக்கும் பஸில் ராஜபக்ஷ பதில் சொல்லியே ஆகவேண்டும்-என்றார். (அ)





# 'நெதுன்கமுவ ராஜா' யானை உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 08

கண்டி-எசல பெரஹரவில் அதிக தடவைகள் புனித தந்த தாதுவை சுமந்து சென்ற நெதுன்கமுவ ராஜா என்ற யானை 69 வயதில் மரணித்துள்ளது.

கடந்த 2007ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரையில், இந்த யானை கண்டி - எசல பெரஹரவில் அதிக தடவைகள் புனித தந்த தாதுவை சுமந்திருந்தது.

குறித்த யானை நேற்று அதிகாலை 5.30 மணியளவில் மரணித்ததாக அதன் பராமரிப்பாளர் வைத்தியர் ஹர்ச தர்மவிஜய தெரிவித்துள்ளார்.

1953ஆம் ஆண்டு இந்தியாவின்-மனிப்பூரில் பிறந்த நெதுன்கமுவ ராஜா, 10 அடி உயரம் கொண்டதென்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தாயைசுத்தியலால்தாக்கிய 17 வயது மகள் கைதாகினார்

கொழும்பு, மார்ச் 08

பேருவளை, கலவில கந்த பகுதியில் தாயை சுத்தியலால் தாக்கிய மகள் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த தாய், மகளின் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்த நிலையில், தாயின் தலையில் அவர் சுத்தியலால் தாக்கியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த தாய் பேருவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

காதல் தொடர்பை நிறுத்துமாறு எச்சரித்ததால் தாயை மகள் சுத்தியலால் தாக்கியுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. சந்தேகநபரான மகளை தமது பொறுப்பில் எடுத்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# வாகரை பிரதேசத்தில் யானைகள் அட்டகாசம்

## பயன்தரு மரங்கள் சேதம்

மட்டக்களப்பு, மார்ச் 08

வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புணாணை கிழக்கு கிராம அதிகாரி பிரிவிலுள்ள குகனேசபுரம் பகுதிக்குள் நேற்று அதிகாலை காட்டு யானைகள் புகுந்து பெறுமதியான தென்னை மரங்கள், தோட்டப்பயிர்கள் என்பவற்றை சேதப்படுத்தியுள்ளன.

இப்பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதுடன், பெறுமதியான தென்னை, மா, பலா போன்ற மரங்களும் காய்கறிப் பயிர்களும், மரவள்ளித் தோட்டமும் சேதப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதில் அதிகமான வளர்ந்த தென்னைகள் மற்றும் தோட்டப்பயிர்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன், சுற்றுவேலியும் சேதமாக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பிரதேசத்தில் வதியும் மக்கள் உயிரச்சுறுத்தலுடன் வாழ்ந்து வருவதுடன், பாரிய நஷ்டங்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

இப்பிரதேசத்திற்குள் நுழையும் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த நிரந்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் தொடர்ச்சியாக இவ்வாறான அழிவுகளைத் தவிர்க்க முடியாத சூழ்நிலை காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நிரந்தரத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் யானை வேலி அமைத்து தருவதுடன், எங்களது உயிர்களையும், பயிர்களையும் பாதுகாக்க உதவ வேண்டுமென இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ)

# அத்தியாவசிய பொருள் தட்டுப்பாட்டை கண்காணிக்க விசேட வேலைத்திட்டம்

கொழும்பு, மார்ச் 08

சந்தையில் அத்தியாவசியப் பொருட்களில் தட்டுப்பாடு நிலவுகின்றதா என்பது தொடர்பில் கண்காணிப்பதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றை, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை முன்னெடுத்துள்ளது.

நிதியமைச்சரின் ஆலோசனையின் அடிப்படையில், நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ணவினால் பிரதேச செயலகங்களின் ஊடாக இதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

இதன்படி, சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள வர்த்தக நிலையங்களில் அரிசி, சீனி, பருப்பு, சமையல் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் கையிருப்பு தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கொழும்பில் இருந்து ஏனைய பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொருட்களை விநியோகிக்கும் பல பாரவூர்திகள் சேவையில் இருந்து விலகியுள்ளன.

இதனால் பல்வேறு பகுதிகளில் அத்தியாவசிய பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

## சமஷ்டி...

தமிழர் தம் ஒற்றுமை என்ற தலைப்பில் பத்திரிகைகளுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கட்டுரையிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

அந்தக் கட்டுரையில் அவர் மேலும் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு,

"தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் சிங்கள மக்கட் தலைவர்கள் ஒற்றுமையுடன் நடந்துகொள்வதை நாம் பார்த்து வருகின்றோம். இன்று சிங்கள - பௌத்த பெரும்பான்மையினர் நாட்டை சிங்கள - பௌத்த நாடாக மாற்ற பகீரதப் பிரயத்தனங்களில் ஈடுபட்டுள்ளார்கள். புதிய அரசியல் யாப்புத் தயாரிப்பு அந்தத் திக்கையே சுட்டிக் காட்டிக் கொண்டு நிற்கின்றது.

இப்பொழுதுதான் சிறுபான்மையினரின் ஒற்றுமை வெகுவாக வேண்டப்படுகிறது. இதை இன்றைய மலையக மற்றும் முஸ்லிம் தலைவர்கள் சிலர் புரிந்து கொண்டுள்ளார்கள். ஆனால், தமிழ்த் தலைவர்கள் சிலரினுள் ஆணவம் தலை விரித்தாடுகின்றது. தமிழ்த் தலைவர்கள் இடையே ஐக்கியம் ஏற்படுவதை எப்படியாவது குலைக்க வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கின்றார்கள்.

எமது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி கூட்டு சமஷ்டியை வலியுறுத்தி நிற்கின்றோம் என்று கூறலாம். ஆனால், அடிப்படையில் நாம் வேண்டுவது சமஷ்டியையே. தமிழ்க் காங்கிரஸின் யாப்பு எப்படி இருப்பினும் அவர்களின் தற்போதைய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேண்டுவது சமஷ்டியையே. பின் ஏன் எங்களுள் பிரிவினை?

மக்களின் ஒற்றுமையை நாம் உருவாக்கி எம் இனத்திற்கான தீர்வைப் பெற்று விட்டு தலைமைத்துவப் போட்டியில் இறங்கலாமே! நாம் எம்முள் போட்டி போடுவது எமது எதிரிகளுக்குத்தான் நன்மையைத் தரும் என்பதை நாம் மறக்கக்கூடாது.

இன்றைய காலகட்டத்தில் தமிழ்த் தேசியம் பேசும் அனைத்துக் கட்சிகளினதும் ஒற்றுமையானது அந்தந்தக் கட்சித் தலைவர்கள் அனைவரையும் சிறந்த தலைவர்களாகவே கணிக்க வைக்கும். அதை நாம் மறந்துவிடலாகாது.

இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் எமது முன்னோர்கள், நாம், பிரித்தானியா, இந்தியா, அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகள் விட்ட தவறுகளைத் தொடர்ந்து பேசுவதில் பயனில்லை. ஐ.நா. சபை போன்ற சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் போன்றன விட்ட தவறுகளைப் பேசிப் பயனில்லை. இன்று, எமது அகிம்சைப் போராட்டங்களுக்குப் பின்னர், ஆயுதப் போராட்டங்களுக்குப் பின்னர் ஓர் ஆபத்தான காலகட்டத்தை எட்டியுள்ளோம். காணிகள் பறிபோகின்றன. சிங்கள மொழியின் பிரயோகம் வடக்கு, கிழக்கில் அரசாங்கத்தால் மும்முரமாகத் திணிக்கப்பட்டு வருகின்றது.

கலாசார, வரலாற்று அழிப்புக்கள் நடைபெற்று வருகின்றன. எமது நல்ல கல்லூரிகள் மாகாணத்திடம் இருந்து மத்திக்கு தேசியப் பாடசாலைகள் என்ற போர்வையில் கையேற்கப்பட்டு வருகின்றன. இராணுவம் தம்மைப் பலமாக இங்கு நிலை நிறுத்தியுள்ளார்கள். தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் வெகுவாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் கட்சித் தலைவர்கள் யாவரும் ஒன்றிணைந்து கடமையாற்றுவது வெறும் உசிதம் அல்ல உச்ச கட்ட யுக்தியாகும்.

இதனை உணர்ந்து தான் அண்மையில் 6 கட்சிகள் சேர்ந்து இந்தியப் பிரதமர் மோடிக்குக் கடிதம் அனுப்பினோம். ஐந்து கட்சிகள் சேர்ந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்குக் கடிதம் அனுப்பினோம். ஆணையாளரின் உயர் மட்ட அலுவலர்களுடன் சூமில் பேசினோம்.

இன்று வெள்ளம் தலைக்கேறிவிட்டது. ஒற்றுமையின்றேல் அனைவர்க்கும் தாழ்வே என்ற கட்டத்தை நாம் அனைவரும் அடைந்துள்ளோம். பெரும்பான்மையினக் கட்சிகளுடன் சேர்ந்திருப்போருக்கு அது தெரியாமல் இருக்கலாம். ஏனென்றால், சுயநலம் அவர்கள் கண்களை மூடியிருக்கும். ஆனால், தமிழ்த் தேசியம் பேசுவோருக்கு அது புரிந்திருக்கும்.

தமிழ்த் தேசியம் பேசுவோரில் தமிழ் மீதும் தமிழர்மீதும் கூடிய அக்கறை கொண்டவர்கள் யார் என்ற கேள்விக்கு விடை காணாப்புகின் தமிழ் மக்களே பாதிக்கப்படுவார்கள். தமிழ் மக்களின் முன்னேற்றமும், பாதுகாப்பும், வாழ்வியல், பொருளாதார அபிவிருத்திகளும், எமது பாரம்பரிய பூமியில் வருங்கால தமிழின நிலையான இருப்பும் முக்கியமாகக் கருதப்படவேண்டும். முன்னைய தமிழ்த் தலைவர்கள் கருத்தொருமித்தலால் வழக்குகளை வென்றார்கள். ஆனால், உண்மையான ஒற்றுமையை அரும்ப வைக்க அவர்களால் முடியவில்லை.

இன்றைய தமிழ்த் தலைவர்கள் கருத்தொருமித்தலால் ஒன்று சேர்ந்து வட, கிழக்கு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பெற வேண்டும். சர்வதேச நிலைமைகள் பூகோள அரசியல் சூழல் ஆகியன சாதகமாக வந்து கொண்டிருக்கும் இவ் வேளையில் நாம் எமது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு இடமளியாமல் எமது மக்களின் வருங்காலம் பற்றிச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

தேர்தலின் போதான கட்சிகளின் சுயலாப நோக்கங்கள், கட்சித் தலைவர்களின் சுயநல ஏக்கங்கள் போன்றன தனிப்பட்ட விரோத மனப்பாங்குகள், பேதங்கள், ஈகோ அல்லது அகந்தை நிறை சிந்தனைகள் ஆகியவற்றைத் தாண்டி நாம் ஒற்றுமை காப்பது அவசியம்.

தமிழரின் விடியலுக்காக திறந்த மனதுடன் கலந்துறவாடி ஓர் ஒற்றுமை ஒன்றியத்தை உருவாக்குவது அவசியம். அதன் பின்னர் அரசாங்கத்துடனும் சர்வதேசத்துடனும் பேசுவோம். நிலத்திலும், புலத்திலும், தமிழகத்திலும் உள்ள தமிழுறவுகள் இவ்வாறான ஒற்றுமைக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். ஒன்று சேர்ந்து ஒரு சமஷ்டி அரசியல் யாப்பை இலங்கையில் உருவாக்கப் பாடுபடுவோம் - என்றுள்ளது. (ஐ)

## இலட்சியம்...

மாவட்ட மகளிர் அணியின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற, மகளிர் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "கடந்த 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிற்பாடு தமிழர் தாயகப் பகுதிகளில் இருந்த 90ஆயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்காக நாம் ஆட்சியாளர் களிடத்திலே பேசினோம். அந்த 90 ஆயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்காக நான் பிரார்த்திக்கின்றேன்.

குறிப்பாக அப்போதிருந்த பிரதமர் மற்றும் ஜனாதிபதி, நீதி அமைச்சர் ஆகியோரிடத்திலே பேசினோம். இதனடிப்படையில் வரவு - செலவுத் திட்டத்திலே பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்காக நிதிகளும் ஒதுக்கப்பட்டன.

அத்தோடு போராலே பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புக்களுக்காக நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டன. அவை திருப்தி அடையக்கூடிய விதத்தில் அமைந்தது என்று நான் செல்லவில்லை. அதேபோல் அனைவருக்கும் அந்தக் கொடுப்பனவுகளும், வேலை வாய்ப்புக்களும் சரியாகப் போய்ச் சேர்ந்தன என்றும் நான் சொல்லவில்லை. போரில் இழந்த பெண்கள் அனைவருக்கும் நாம் அஞ்சலி செலுத்த வேண்டிய வர்களாக இருக்கின்றோம்.

எமது இளையோர்கள் எந்த இலட்சியத்துக்காகக் கடந்த காலத்தில் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்தார்களோ, அந்த இலட்சியட்சியத்தை எட்டும்வரை எமது பயணம் ஓயாது.

பெண்கள் விடுதலை மாத்திரம் அல்ல நம் இனத்தின் விடுதலைக்காகவும், நம் தேசத்தின் விடுதலைக்காகவும் தமிழ் அரசுக் கட்சியின் மகளிர் அணியினர் போராடுவார்கள் - என்றார். (ஐ)

# மக்களுக்கு நம்பிக்கையான அரசை நாம் உருவாக்குவோம்!

## சாய்ந்தமருதில் அநுரகுமார உறுதி

சாய்ந்தமருது, மார்ச் 08

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக மக்களுக்கு கஷ்டங்கள் இல்லாத மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் அரசாங்கத்தை அமைக்க போவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பாறை - சாய்ந்த மருது பிரதேசத்தில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நீண்டகாலமாக நாட்டை ஆட்சி செய்த இரண்டு கட்சிகள் முழு நாட்டையும் அழித்து விட்டன. தற்போது மக்கள் எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியவசிய பொருட்களுக்கான தட்டுப்பாட்டை எதிர் நோக்கியுள்ளனர்.

எனினும், இவர்களில் மகிழ்ச்சியடையும் அணியும் இருக்கின்றது. அந்த அணி திருடர்கள் மற்றும் அரசியல் வாதிகளை நம்பி வாழும் வர்த்தகர்கள் அணி - என்றும் சாடினார். (ஐ)

## கொரோனா...

ஆணும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 3 ஆண்களும், 3 பெண்களுமாக 06 பேரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 339 ஆக உயர்வடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அனைத்து...

மேலும் உள்ளூராட்சி தலைவர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மின்சாரத்தை சேமிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் பஸில் ராஜபக்ஷ கேட்டுக்கொண்டார்.

அத்தோடு மின்சார பாவனையை குறைப்பதற்கான மாற்று வழிகள் குறித்து அறிவிக்குமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே நிதியமைச்சர் பஸில் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். (அ)

## சுதந்திர...

விலகுவதற்கு இது சரியான தருணம் அல்ல, சரியான சந்தர்ப்பத்தில் விலகுவோம்" என்றார்.

இந்த நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரை இன்று ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துப் பேசவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஒட்டுமொத்த...

கவலைகளை எழுப்பியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தன்னிச்சையான தடுப்புக்காவல், சித்திரவதை மற்றும் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் தண்டனைகளை வழங்கும் பயங்கரவாத தடைச் சட்டத்தில் மாற்றங்களைச் செய்ய அரசாங்கம் தயங்குவது குறித்தும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் சுதந்திரமாக கருத்து தெரிவிக்க முடியாத நிலை மற்றும் அரச உயர் மட்ட பதவிகளில் இராணுவ அதிகாரிகள் நியமிப்பு, சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் பிரச்னைகள் மற்றும் ரஞ்சன் ராமநாயக்கவின் சிறைவாசம் குறித்தும் ஹரீன் பெர்னாண்டோ தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும் அத்தியாவசியப் பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகின்றமை, மின்வெட்டு, எரிபொருளுக்கான நீண்ட வரிசையில் நிற்பது மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகியவை குறித்தும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே முன்னெப்போதையும் விட அதிகமான மனித உரிமை அச்சுறுத்தல்களை எதிர்நோக்கும் இலங்கை மக்களுக்கு சர்வதேச சமூகம் ஆதரவளிக்கவேண்டும் என பாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ கேட்டுக்கொண்டார். (அ)

## யாழில்...

ஆபரண தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 21 ஆயிரம் ரூபாயாக உயர்வடைந்துள்ளது.

கடந்த விக்கிழமை ஒரு பவுண் ஆபரணத் தங்கம் ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 625 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

24 கரட் தூய தங்கம் நேற்று பவுண் ஒன்று ஒரு இலட்சத்து 32 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது. சனிக்கிழமை 24 கரட் தூய தங்கத்தின் விலை ஒரு பவுண் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 500 ரூபாயாகக் காணப்பட்டது. (ஐ)

## கல்வி...

உறுப்பினர்களே அந்தத் தகவல்களை வழங்கியுள்ளனர். எனினும் 20 வீதமான பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்னமும் அவற்றை வழங்காதுள்ளனர். சிலரிடம் வினவினாலும் அவர்கள் பல்வேறு காரணிகளை கூறித் தகவல் வழங்குவதில் இருந்து நழுவிச்செல்கின்றனர் என்று பாராளுமன்ற அலுவலக அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

எவ்வாறு இருப்பினும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் மக்களின் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் அடிப்படை தகுதி இருக்க வேண்டும். இதேபோல் அவர்கள் வழங்கும் தகவல்களில் உண்மைத்தன்மை இருக்க வேண்டும். இவ்வாறு தகவல் வழங்க மறுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் தகவல்களை பெற்றுத்தர சபாநாயகரை வலியுறுத்துவதாகவும் அந்த அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

## ஈஸ்டர்...

உட்பட 269 பேர் கொல்லப்பட்டனர் என்றும் 14 நாடுகளைச் சேர்ந்த 47 வெளிநாட்டினர் உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த தற்கொலை குண்டு தாக்குதல் இஸ்லாமிய தீவிரவாதிகளினால் முன்னெடுக்கப்பட்டபோதும் இந்த படுகொலையில் பெரும் அரசியல் சதித்திட்டம் இருப்பது அடுத்தடுத்த விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் பலமுறை நாம் கோரிக்கை விடுத்தும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதற்கு தற்போதைய இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது.

தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையை வெளிக்கொணருவதற்கும், பொறுப்பு கூறவேண்டியவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு பதிலாக, நீதிக்காகக் குரல் கொடுப்பவர்களை அடக்கும் நடவடிக்கை இடம்பெறுகிறது.

ஆகவே சாட்சிய சேகரிப்பு நடவடிக்கையோடு தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையை கண்டறிய பக்கச்சார்பற்ற விசாரணையை உறுதி செய்வதற்கான வழிமுறைகளை வகுக்க வேண்டும் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# ஆட்சியைக் கவிழ்க்க முயன்றால் பேரிழப்பு!

## ஜோன்ஸ்டன் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 08

தெரிந்தோ தெரியாமலோ யாராவது ஆட்சியைக் கவிழ்க்க முயன்றால் அதனால் பேரிழப்பு ஏற்படும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ எச்சரித்துள்ளார்.

இதன் காரணமாகவே அமைச்சர்கள் இருவரை பதவி நீக்கம் செய்ய ஜனாதிபதி தீர்மானித்தார் என அவர் மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமைச்சர்களானாலும், இராஜாங்க அமைச்சர்களானாலும் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு எதிர்க்கட்சியில் இருந்து செய்தவற்றையே தற்போதும் செய்கின்றனர். சஜித் மற்றும் அநுர ஆகியோர் நாட்டில் எரிபொருள் இல்லை என கூறி குழப்பத்தை ஏற்படுத்தியமையி னாலேயே மக்கள் தற்போது வரிசையில் நிற்கின்றனர்.



நாட்டுக்கு தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளது. மீண்டும் ஒருமுறை எரிபொருள் பிரச்னை ஏற்பட இடமளிக்க மாட்டோம்-என்றார். (அ)

# யாழ். இந்திய துணைதூதருடன் மீனவர் சங்கத்தினர் சந்திப்பு!



யாழ்ப்பாணம், மார்ச் 08

யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவரை யாழ். மாவட்ட மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் திங்கட்கிழமை சந்தித்து கலந்துரையாடினர்.

நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இதன் போது, துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங் களின் சம்மேளன தலைவர் அன்னலிங்கம் அன்னராசா, உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம் மற்றும் காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க தலைவர் கந்தசாமி ராஜசந்திரன் ஆகியோர் சந்தித்து தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அத்துடன், அவர்கள் தமிழக முதலமைச்சருக்கு ஊடகங்கள் மூலம் அண்மையில் வெளியிட்ட கடிதத்தையும் மனுவாகக் கையளித்தனர். (ஐ)

# அம்பாந்தோட்டையில் வருமானம் குறைந்த 626 குடும்பங்களுக்கு புதிய வீடமைப்பு உதவி

கொழும்பு, மார்ச் 08

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 576 கிராம சேவகர் பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குறைந்த வருமானம் பெறும் 626 குடும்பங்களுக்கு வீடமைப்பு காசோலைகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் தங்காலை மாநகர சபை மண்டபத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

உங்களுக்கு வீடு - நாட்டிற்கு எதிர்காலம் வீடமைப்பு உதவித் திட்டத்தின் கீழ் 588 புதிய வீடுகள், மிஹிந்து நிவன வீடமைப்புத் திட்டத்தின் கீழ் தமது பிள்ளைகளை பௌத்த சாசனத்திற்கு அர்ப்பணித்த குறைந்த வருமானம் பெறும் 14 பயனாளிகளுக்கும், ஊனமுற்ற அல்லது மிகவும் ஏழ்மையான குடும்பங்களுக்கு வீடுகளை பெற்றுக் கொடுக்கும் செவன உதவித் திட்டத்தின் கீழ் 24 பயனாளிகளுக்கும் இதன்போது காசோலைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, தென் மாகாண ஆளுநர் வில்லி கமகே, இராஜாங்க அமைச்சர்களான டீ.வீ.சானக, இந்திக அனுருத்த, பாராளுமன்ற உறுப்பினர்களான அஜித் ராஜபக்ஷ, தென் மாகாண சபையின் தவிசாளர் சோமவன்ஸ கோதாகொட உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)

# பதவி விலகவேண்டும் அரசு!

## வலியுறுத்துகின்றது ஐ.தே.க.

கொழும்பு, மார்ச் 08

பொதுமக்களுக்கான அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்த முடியாவிட்டால், அரசாங்கம் பதவி விலகவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிப் பொதுமக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் இரண்டு வருடங்களில் நாட்டை சீர்குலைத்துள்ளது.

பொருட்களை வாங்குவதற்காக நாடு முழுவதும் மக்கள் வரிசையில் நிற்பது, அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது என்பதை காட்டுகிறது.

அரசாங்கத்துக்கு அழுத்தங்களை பிரயோகிக்கும் நோக்கில் எதிர்வரும் 25ஆம் திகதி கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த போராட்டமானது நாட்டைப் பாதுகாக்கும் தேசிய நிகழ்வாக அமையும்-என்றுள்ளது. (அ)

# இடமாற்றம் இல்லை; அதிபர்கள் கவலை!

கிளிநொச்சி, மார்ச் 08

கிளிநொச்சி வடக்கு மற்றும் தெற்கு கல்வி வலயங்களில் உள்ள பல பாடசாலைகளில் அதிபர்கள் 7 வருடங்களை கடந்தும் இடமாற்றம் வழங்கப்படாமல் தொடர்ந்தும் கடமையாற்றி வருகின்றனர் என பாதிக்கப்பட்ட அதிபர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வழமையான இடமாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் இதனை விரைவாக மேற்கொள்ள மாகாண மற்றும் வலய கல்வி திணைக்களங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜனை தொடர்புகொண்டு வினவிய போது, 7 வருடங்களை பூர்த்தி செய்த அதிபர்களின் இடமாற்றம் தொடர்பில் மாகாண கல்வி அமைச்சின் கவனத்துக்கு தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். (ஐ)

# விமல், கம்மன்பில, வாசுதேவ எதிரணியில் அமரவேண்டும்

## நளின் பண்டார கோரிக்கை

கொழும்பு, மார்ச் 08

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் இந்த தருணத்தில் எதிர்க்கட்சியில் தனிக் குழுவாக செயற்படவேண்டும் என எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்துக்குள் இருந்துகொண்டு விமர்சனங்களை முன்வைப்பதற்குப் பதிலாக, மூன்று உறுப்பினர்களும் எதிர்க்கட்சியில் அமர்ந்து அரசை விமர்சிக்கவேண்டும்.

மேலும் இந்த அரசாங்கம் தோல்வியடைந்து விட்டது. தேர்தல் ஒன்று வந்தால் மக்களே இவர்களை வீட்டுக்கு அனுப்புவார்கள்.

நாட்டின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள அதேநேரம் விவசாயிகளின் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது.

பொருளாதாரத்தின் முதுகெலும்பு விவசாயிகளே என்பதை அரசாங்கம் அறியாதமையின் விளைவையே நாடு தற்போது அனுபவித்து வருகிறது-என்றார். (அ)

# மஹிந்தவின் கருத்து முட்டாள்தனமானது

## விமல் பகிரங்க குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 08

எரிபொருள் நெருக்கடி தொடர்பாக அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த கருத்து முட்டாள்தனமானது என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

எரிபொருள் நெருக்கடி என்ற தவறான கருத்து காரணமாகவே மக்கள் அச்சத்தில் உள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் கடுமையான டொலர் தட்டுப்பாட்டுக்கு மத்தியில் இதுபோன்ற அறிக்கைகள் நகைச்சுவை மற்றும் முட்டாள்தனமானவை என விமல் வீரவன்ஸ குற்றம் சாட்டியுள்ளார்.

இன்னும் இரண்டு மூன்று நாட்களில் எரிபொருள் கையிருப்பு தீர்ந்துவிடும் என்ற அமைச்சரின் அறிவிப்பினால் இந்த தட்டுப்பாடு ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

வங்கிகளில் இருந்து பணம் வழங்கப்படவில்லை என்றால், எரிபொருள் மற்றும் எரிவாயுவை இறக்குமதி செய்ய முடியாது என்றும் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டார். (அ)

# மின், காஸ் நெருக்கடியால் மூடப்படும் சிற்றுண்டிச்சாலைகள், உணவகங்கள்!

கொழும்பு, மார்ச் 08

மின்சாரம் மற்றும் எரிவாயு நெருக்கடி காரணமாக பல உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் மூடப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் கூறியுள்ளது.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள அரச நிறுவனங்களில் உள்ள சுமார் 1500 உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

அத்தோடு வைத்தியசாலைகளில் உள்ள சிற்றுண்டிச்சாலைகளின் செயற்பாடுகள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாகவும் அவர் கூறினார். வைத்தியசாலைகளில் இந்நிலை ஏற்பட்டால் நோயாளிகள் முதல் துப்புரவுப் பணியாளர்கள் வரை அனைருக்கும் உணவு கிடைக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, தற்போது நிலவும் நெருக்கடிக்கு தீர்வு காண அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என அசேல சம்பத் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, பொதுநிர்வாக அமைச்சு, கல்வி அமைச்சு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகியவற்றில் உள்ள சிற்றுண்டிச்சாலைகளும் மூடப்படும் அபாயம் இருப்பதாக அவர் கூறினார். (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : பட்டிமன்றம் - மகளிர் தின சிறப்பு நிகழ்ச்சி




11.30 மணி : அவள் ஒரு சரித்திரம் - மகளிர் தின சிறப்பு நிகழ்ச்சி




12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - பவர் பாண்டி,எந்திரன் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : பெண்மணி அவள் கண்மணி- மகளிர் தின சிறப்பு நிகழ்ச்சி




6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

இரவு

7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : BLACK AND WHITE

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு